விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை –16 | 28–04–2004 | புதன்கிழமை | ஓசை –70

உங்களிடம் தேவை இருக்கிறது
எங்களிடம் கைதேர்ந்த நகைத்
தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்



கணேசா நகையகம்

194,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-9293)
123,பஜார் வீதி, வவுனியா.

ஈ.பி.டி.பி. முகாம் எரிப்பு விவகாரம்

## அனலைதீவில் சிறில. பொலிசார் வீடுவீடாகத் தேடுதல்வேட்டை

### 13 பொதுமக்கள் கைது

(வடமராட்சி)

**நடந்து முடிந்த நாடாளுமன்றப்பொதுத்தேர்தலினைத் தொடர்ந்து அனலைதீவுப்பகுதியில் ஈ.பி.டி.பி. அமைப்பினரது முகாமொன்று தீயிட்டு எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அப்பகுதியைச்சேர்ந்த பொதுமக்கள் 13 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து சென்ற பொலிஸ் அணியொன்றே வீடு வீடாக சுற்றிவளைத்து இப்பதின்மூன்று பொதுமக்களையும் கைது செய்ததாக தெரியவருகின்றது.**

இதனிடையே கைது செய்யப்பட்ட இவர்கள் அனைவரும் ஊர்காவற்துறை நீதவான் அபிறேம் சங்கர் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களை எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதிவரை யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைப்பதற்கான உத்தரவைப்பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.நகரப்பகுதியுடனோ ஏனைய தீவுகளுடனோ எந்தவொரு தரைவழித்தொடர்பு மற்ற தனித்ததோர் தீவான அனலைதீவுப் பகுதிக்கு படகுகளிலேயே பயணஞ்செய்ய முடியும். இந்நிலையில் தாம் பழிவாங்கப்படும் நோக்கில் மேலும் கைதுகள் இடம்பெறலாமென அப்பகுதி மக்களிடையே அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொது மக்களை தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.கஜேந்திரன் மற்றும் திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு உரையாடினர்(27)

## புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு முல்லாமுனையில் ஊடுருவல் தாக்குதலையடுத்து மட்டக்களப்பு புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் நுழைவாயில்களில் உள்ள முன்னரங்க காவல் நிலைகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் காவற்கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதுடன், முக்கிய இடங்களில் கால்நடை ரோந்தும், பதுங்கு நிலை ரோந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சந்தேகத்திற்கிடமானவர்களும், வாகனங்களும் தீவிர சோதனைக்குள்ளாக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஆயித்தியமலை முல்லாமுனை பிரதேசத்தில் நேற்று விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 7 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவிக்கின்றது. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள், விஜயம் செய்ததாக அந்தக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் தெரிவித்தார்.

## மூன்று போராளிகளின் வித்துடல்களை கண்காணிப்புக்குழு பார்வையிட்டது

மட்டக்களப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்த போராளிகளின் வித்துடல்களை அவர்களது வீடுகளுக்குச் சென்று போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் பார்வையிட்டுள்ளனர்.

இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மூன்று வீடுகளுக்குச் சென்று வித்துடல்கள் கண்காணிப்பு குழுவினால் பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாவட்டத் தேர்தலை ரத்துச் செய்யக்கோரி மனு

### - ஜே.வி.பி தாக்கல் செய்தது

கடந்த இரண்டாம் திகதி நடைபெற்ற தேர்தலின் போது யாழ். மாவட்டத்தில் வெளியான முடிவுகளை மாற்றுமாறு கோரி ஜே.வி.பி.யின் யாழ். மாவட்ட வேட்பாளர் குலேந்திரன் நேற்று மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார். தேர்தலில் யாழ். மாவட்டத்தில் வெளியான முடிவுகளை ரத்துச் செய்யுமாறு இம்மனுவில் கூறியுள்ளார். அத்துடன் புலிகளுக்கு வாய்பாகவே இத்தேர்தல் அமைந்ததெனவும், எனவே முழுமையான இத் தேர்தலை ரத்துச் செய்யுமாறும் கோரியுள்ளார். இதேவேளை பிரதிவாதிகளாக 122 பேர் இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர். (32)

## பொலிஸ்,ராணுவப் பாதுகாப்பை ஏற்க கஜேந்திரன் மறுப்பு

இராணுவ-பொலிஸ் பாதுகாப்பை நான் ஏற்கப் போவதில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தெரிவித்தார்.

சிறிலங்காவின் பாராளுமன்றத்திற்கு தான் சென்றாலும் வடக்கு-கிழக்கில் எக்கட்டத்திலும் தான் இராணுவ-பொலிஸ் பாதுகாப்பை ஏற்கப் போவதில்லையெனவும், பொதுமக்களை சந்திக்கின்ற சந்தர்ப்பங்களில் இராணுவமும், பொலிசும் தன்னுடன் வந்தால் மக்கள் சுதந்திரமாக தமது கருத்துக்களை வெளிப்படுத்தத் தயங்குவார்கள் எனவும், இதைவிட சிறிலங்கா இராணுவமும், பொலிசும் தன்னுடன் வந்தால் தான்கூட சுதந்திரமாக செயற்பட முடியாது போகும் நிலைமை இருக்குமென அவர் தெரிவித்தார்.

## கருணா தேசவிரோதக்குழுவின் தாக்குதலில் மட்டக்களப்பில் வீரச்சாவடைந்தோர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஞாயிறன்று விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றின் மீதும் காவலரண் ஒன்றின் மீதும் கருணா தேசவிரோதக் குழுவினர் நடத்திய தாக்குதலில் ஏழு போராளிகள் வீரச்சாவடைந்தனர். இவர்களின் விபரம் வருமாறு:

மட்டு. வவுணதீவுப் பகுதி மாயாவடி என்னும் இடத்தில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் முகாம் ஒன்றின் மீது கருணா தேசவிரோத குழுவினர் தாக்கியதில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந் துள்ளனர்.

* கப்டன்- சிசிக்குமார்
(கணபதிப்பிள்ளை- திருப்பாதம் வள்ளுவர் மேடு, பழுகாமம் - 1, பெரியபோரதீவு, மட்டு)

* கப்டன்-வாமக்காந்
(கணேசன்-லிங்கநாதன் விஸ்ணுஆலயவீதி கிரான் மட்டு)

* லெப்டினன்ட்--வினோரஞ்சன்
(செல்லையா-மோறாச் பதுளைவீதி, காயங்குடா, செங்கலடி மட்டு)

* 2ஆம்லெப்டினன்ட் -தாரணன்
(தெய்வநாயகம்-சந்திரகுமார் நெல்லிக்காடு, ஆயித்தியமலை மட்டு)

ஆகிய நான்கு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

மட்டு.வவுணதீவு புளியம்மடு என்னும் இடத்தில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் காவலரண் மீது கருணா தேசவிரோத குழுவினர் தாக்கியதில் போராளிகள் மூவர் வீரச்சாவடைந்துள்ளனர்.

* கப்டன்-தியானேஸ்வரன்
(நடராசா-சுரேஸ்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவர் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற பொதுத்தேர்தலின் பின் யாழ்.மாவட்டத்தில் நிலவும் அரசியல் ராணுவ நிலவரங்கள் மற்றும் யாழ். குடாநாட்டு மக்கள் எதிர்கொள்ளும் இயல்பு வாழ்வு பிரச்சினைகள் தொடர்பாக நேரில் பார்வையிடுவதற்காக யாழ்ப்பாணம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்-படையினர் சந்திப்பு நேற்று இரத்துச் செய்யப்பட்டது

புலிகளுக்கும், இராணுவத்திற்குமிடையே நேற்று மட்டக்களப்பில் நடைபெறயிருந்த சந்திப்பு புலிகளின் வேண்டுகோளிற்கமைய இரத்துச்செய்யப்பட்டுள்ளதென மட்டக்களப்பு போர்நிறுத்த கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வவுணதீவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகள் 07 பேர் துரோகி கருணா கும்பலால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளமை தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்பட விருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இத்தாலி அழைத்துச் செல்வதாகக் கூறி சோமாலியாவில் விட்டுச்சென்ற முகவர்கள்

### - 470 க்கும் மேற்பட்ட இலங்கையர் அவதி

(கொழும்பு)

இலங்கையர்களை நேரடியாக இத்தாலிக்கு அழைத்துச்செல்வதாக கூறி பணத்தைப்பெற்றுக் கொண்ட ஏஜென்சி இவர்களை தற்போது ஆபிரிக்காவில் விட்டுள்ளனர். 470 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தற்போது ஆபிரிக்காவிலுள்ள சோமாலியா நாட்டின் வடகிழக்குப் பகுதியிலுள்ள துறைமுகநகரான மொசோகோவிலில் வாழ்கின்றனர். இவர்களில் அதிகமானோர் ஒன்றரை ஆண்டுகளுக்கு அதிகமாக அங்கு வாழ்கின்றனர்.

மொசோகோவிலில் வாழ்கின்றவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

இங்கு வருவதற்கு முன்னர் இந்நகரின் பெயரைக்கூட நாங்கள் கேள்விப்படவில்லை. இலங்கையிலிருந்து விமானம் மூலம் ஐக்கிய அரபு எமிரேட் வழியாக எம்மை கொண்டுவந்து ஏஜென்சிகள் இங்கு விட்டுள்ளனர். நாம் செல்லவுள்ள நாடு இத்தாலி. இத்தாலிக்கு நேரடியாக அழைத்துச்செல்வதாகக் கூறிய ஏஜென்சி ஏன் எம்மை இங்கு கொண்டுவந்து விட்டுள்ளாரெனத் தெரியவில்லையெனமேலும் தெரிவித்துள்ளனர். இவர்கள் சுமார் ஐயாயிரம் அமெரிக்க டொலர்கள் ஏஜென்சியிடம் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது

## மாளிகாவத்தையில் துப்பாக்கிச்சூடு வாழைச்சேனை இளைஞர் பலி

கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார். காயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிசார் தெரிவித்தனர். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியானவர், வாழைச்சேனைப் பிரதேசத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி ரமேஸ் என பொலிசார் அடையாளம் கண்டுள்ளனர். காயமடைந்தவர் ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த மாணிக்கவாசகம் மதனரூபன் என்ற 25 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இது தொடர்பான விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பிரதி பொலிஸ் மா அதிபர் எச்.எம்.சிறிசேன தெரிவித்தார்.

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

கோணாவில் மரப்பாலத்திற்கும் இல.06 கோணாவில் பிள்ளையார் கோவிலுக்கும் இடையில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் கோணாவிலில் அமைந்துள்ள கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தில் ஒப்படைக்கவும். ச.றஜிலா கி.பு.அ.நிறுவனம் கோணாவில். (4369)

### கதிர் (அமல்)

பல் மூக்கு கண்ணாடியகம் உங்கள் கண்களை பரிசோதித்து அதிநவீன மூக்கக்கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும். சொந்தப் பற்களுக்கு நிகரான சங்குப் பற்களை கட்டிக் கொள்ளவும். A-9 வீதி 1-9 தங்ககம் அருகாமை கிளிநொச்சி. (4474)

### வெளிவந்து விட்ட தேடலும் தெளிவும்

ஆசிரியர் போட்டிப்பரீட்சை -2004 * கடந்தகால போட்டிப்பரீட்சை வினாப்பத்திரங்களும் விடைகளும் 1994,1995,1996 * மாதிரிப்பரீட்சை 2004 (வினாவிடைகளுடன்) விரைவில் நடைபெறப்போகும் பரீட்சைக்கான வழிகாட்டி அறிவமுது புத்தகசாலைகளில் (4475)

### காணி விற்பனைக்கு

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி அருகாமையில் உள்ள வீதியில் 1/2 ஏக்கர் காணி பலா, தோடை,தென்னை,கிணறு ஏனைய பயிர்களுடன் காணி விற்பனைக்குண்டு தொடர்பு:தங்கமாளிகை யாழ்சாலை கிளிநொச்சி. (4472)

### காணி விற்பனைக்கு

கிளிநொச்சி குழகமம் 4ஆம் வாய்க்கால் 1ஏக்கர் காணி: மா.தென்னை, பனை,கிணறு உட்பட விற்பனைக்குண்டு தொடர்பு தங்கமாளிகை. யாழ்சாலை கிளிநொச்சி. (4471)

### கேம்பிறிஜ் கல்லூரி கிளிநொச்சி

A/L 2006,2005 இரசாயனவியல் வகுப்பு 28.04.2004 மாலை 4.00 மணிக்கு ஆரம்பம். ஆசிரியர்:- திரு. சண் (9382)

### வருடாந்த விழா

(அலுவலக செய்தியாளர்)

இரணைமடு- கனகாம்பிகை அம்மன் ஆலய பெருங்கோவில் வருடாந்த விழா கடந்த 25 ஆம திகதி கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எதிர் வரும் 3ஆம் திகதி மூன்று சித்திரத் தேர் இரதோட்சபமும் 4ஆம் திகதி தீர்த்த நிகழ்வும், 5ஆம் திகதி பூங்காவனத்திருவிழாவுடன் நிறைவு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# "சத்ஜெய" இராணுவ நடவடிக்கையில் கிளி. மாவட்டத்தில் 21548 வீடுகள் சேதம்

## -அரசாங்க அதிபரின் புள்ளிவிபரம் தெரிவிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் இருபத்தி ஓராயிரத்திற்கு மேற்பட்ட வீடுகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தில் நேற்று நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டத்தில் அரச அதிபர் தி.இராசநாயகம் மேற்படி தகவலை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது 21548 வீடுகள் பாதிப்பிற்குள்ளாகியுள்ளதெனவும் இவற்றில் 17444 வீடுகள் முற்றாகப்பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 4104 வீடுகள் பகுதிப்பாதிப்பிற்குள்ளாகியுள்ளதாகவும் மேற்கொள்ளப் பெற்ற தரவுகள் மூலம் தெரியவந்துள்ளதென தெரிவித்துள்ளதுடன் மேலும் இடம்பெயர்ந்து மீளக்குடியேறாத 7000 குடும்பங்களின் வீடுகளின் சேதவிபர அறிக்கைகள் பெறவேண்டியுள்ளதெனவும்தெரிவித்துள்ளார்.(சோ)

# 21 வைத்தியர் கடமையாற்ற வேண்டிய பரு.வைத்தியசாலையில் நால்வர்மட்டும் கடமையில்

## - சில பிரிவுகள் மூடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் வைத்தியர்களுக்கு கடும் பற்றாக்குறை நிலவுகின்றது. 21 வைத்தியர்கள் கடமையாற்ற வேண்டிய இவ்வைத்தியசாலையில் நான்கு வைத்தியர்கள் மட்டுமே தற்போது கடமையாற்றி வருகின்றனர்.

இதனால் இங்கு சிகிச்சைபெற வரும் நோயாளர்கள் சிரமங்களை எதிர் கொள்கின்றனர் இந்நிலை கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக உள்ளது என்று பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்டத்தில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தையும் வடமராட்சியில் முதலாவது இடத்தையும் பெறும் இந்த வைத்தியசாலையில் கடமையாற்றவேண்டிய வைத்தியர் எண்ணிக்கை 21 ஆகும். ஆனால் தற்போது 4 வைத்தியர்களே இங்கு கடமையாற்றிவருகின்றனர். இதுவிடயமாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் பலதடவைகள் சுகாதாரப்பகுதிக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை ,எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் நோயாளர்கள் அதிகளவில் பாதிக்கப்படுவதுடன் பலசிகிச்சைப்பிரிவுகள் மூடப்பட்ட நிலையில் உள்ளன என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

### வீதி நாடகம்

(உடையார் கட்டு)

முல்லை. மாவட்ட கட்டம் 5 வைத்தியசாலையில் நேற்று முன்தினம் தமிழீழ சுகாதார சேவைகள் பகுதியினர் அனுசரணையில் முல்லை சுகாதார வைத்திய அதிகாரிப்பிரிவு கலைஞர்களின் "மரணம் நிச்சயம்" எனும் வீதி நாடகம் இடம்பெற்றது. இது ஒரு விசர் நாய்க்கடி நோயால் (றேபிஸ்) ஏற்படும் விளைவை விளக்கும் வீதி நாடகமாகும். (19)

# 5 மாகாண சபை தேர்தலும் ஒரே நாளில் கட்சித்தலைவர்களுடன் பேச சனாதிபதி முடிவு

(கொழும்பு)

ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒரே நாளில் நடத்துவது குறித்து சனாதிபதி ஐக்கிய தேசிய கட்சி உட்பட ஏனைய கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற சுதந்திரக்கட்சி மத்திய குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் அநேகமானவர்கள் மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒரே தினத்தில் நடத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்கு பதிலளித்த சனாதிபதி இது குறித்து ஏனைய அரசியல் கட்சிகளின் கருத்துக்களும் அறியப்படும் என்று கூறியுள்ளார்.

வடமேல் மாகாண சபைத் தேர்தல் ஒரேநாளில் நடந்து முடிந்ததுபோல மேல் மாகாணம், ஊவா மாகாணம், வடமத்தி மாகாணம், தென்மாகாணம், மத்திய மாகாணம் ஆகியவற்றின் தேர்தல்களை ஒரே தினத்தில் விடுமுறை நாளில் நடத்த வேண்டும் எனப் பலரும் கோரியுள்ளனர்.

மேற்படி மாகாண சபைகளுக்கான தேர்தல் ஜூன் மாதம் இறுதி வாரத்தில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


### பகிரங்க ஏலவிற்பனை

கரைதுரைப்பற்று ப.நோ.கூ. சங்கத்திற்குச் சொந்தமான 26/4459 இலக்க லொறி இஞ்சின் செசி உட்பட தண்ணீரூற்று ப.நோ.கூ.சங்க தலைமைக்காரியாலயத்தில் 03.05.2004 ஆம் திகதி காலை 9.00 மணியளவில் ஏலவிற்பனை செய்யப்படவிருப்பதனால் அன்றைய தினம் ஏல விற்பனையில் பங்கு கொள்ளவிரும்புவோரை சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு:- லொறியின் செசி பார்வையிட விரும்புவோர் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

(சி.7193) பொதுமுகாமையாளர்,


# மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை உயிரைக்கொடுத்தாகிலும் காப்பாற்றுவோம்

## – ஹெலஉறுமயவின் உயர்பீட தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமய மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை உயிர்த்தியாகத்தின் மூலமாவது காப்பாற்றப்போவதாக கட்சியின் உயர்சங்கச் சபைத்தலைவர் எல்லாவல மேதானந்ததேரர் தெரிவித்துள்ளார்.

ஜாதிகஹெல உறுமய கட்சியின் குறிக்கோள்களை நிறைவேற்ற இறுதிமூச்சு வரை செயற்படப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தங்கள் கட்சி மீதான நெருக்கடிகளும் அச்சுறுத்தல்களும் மேலும் தொடர்ந்தால் மாற்றுத்தீர்மானங்கள் எடுக்க நேரிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஹெல உறுமயவின் சபைச் செயலாளர் உடுவே தர்மாலோக தேரர் தெரிவிக்கையில்,

தமது கட்சிக்கும் உறுப்பினர்களுக்கும் ஊறு விளைவிக்கும் நடவடிக்கைகளுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே பொறுப்பேற்க வேண்டுமென்றார்.


## 03ஆம் ஆண்டு நினைவலையில்....

தாய் மனம் மகிழ - 23 - 09 - 1973



தாய் மண் நெகிழ - 28 - 04 - 2001

### லெப். கேணல் நிர்மா

(ஞானானந்தன் மேரிசாந்தி)

களம்பல கண்டு
கடும் பகை முடித்து
தரணி வியக்கும்
தலைமையின் கீழ்
கண்ணிகள் பல புதைத்து
தீச்சுவாலையின் சுடரொளியில்
விழுதான லெப். கேணல் நிர்மா
உங்கள் வீரத் தடம் பதித்து
திடமுடன் விரைகின்றோம்........

லெப். கேணல்.
பொன்னம்மான்,
கண்ணிவெடிப் பிரிவு.

(சி-7192)


### சமகால அரசியல் கருத்தரங்கு

(மல்லாவி)

சமகால அரசியல் கருத்தரங்கு நிகழ்வு யோகபுரம் ம/வி விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழீழ மாவீரர் போராளிகள் குடும்பநலன் காப்பகத்தைச் சேர்ந்த கு.ஆனந்தன் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் சமகால அரசியல் சம்பந்தமான கருத்துக்களை துணுக்காய் பிரதேச அரசியல் துறையைச் சேர்ந்த பேபி.தனம் வழங்கினர். நிகழ்வில் மக்கள் பலர் கலந்து கொண்டனர். வீடியோ படக்காட்சியும் இடம் பெற்றது சமகால அரசியல் கருத்தரங்கு பாண்டியன் குளம் துணுக்காய் பிரதேசங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (24)


## சாவு அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை ஜெகராசா

சாரதி–இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்
முல்லைத்தீவு மாவட்டக்கிளை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவுக் கிளையின் சாரதியும், திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், 4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை ஜெகராசா அவர்கள் 27.04.2004 ஆம் திகதி கொழும்பு வைத்தியசாலையில் காலமானார். அன்னார் தவம் அவர்களின் அன்புக்கணவரும், ஜெயப்பிரதா, சந்திரிகா, கெங்காதரன், அருணா, பவப்பிரியன் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் திருகோணமலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இறுதிக் கிரியைகட்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

–

தகவல்:
த.யோகராஜ்,
இ.செ.சி.சங்கம்,
முல்லைத்தீவு.

(சி-7195)

# மனித உரிமை மீறல் சம்பவங்களில் லிபியா தொடர்ந்தும் ஈடுபடுகின்றது

## சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம்

**லிபியா மனித உரிமை மீறல் சம்பவங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.லிபியா சனாதிபதி முகம்மர் கடாபி பெல்ஜியத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருக்கும் போது இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.**

சர்வதேச மன்னிப்புச்சபை லிபியா தொடர்பாக மேலும் குறிப்பிடு கையில்,

சிறைத்தண்டனைவிதிப்பது, சித்திரவதை மற்றும் அரசியல் கைதிகளுக்கு மரணதண்டனை விதிப்பது போன்ற பல்வேறு மனித உரிமை மீறல் சம்பவங்களில் லிபியா ஈடுபட்டு வருவதாகவும் அது கவலை தெரிவித்துள்ளது.

இதேவேளை மனித உரிமைகள் தொடர்பாக லிபியா உண்மைத் தன்மையை வெளிப்படுத்த வேண்டுமெனவும் சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.



அமெரிக்க இராணுவ வாகனத்தை தாக்கியழிப்பதில் வெற்றி கண்ட ஈராக்கியர் ஒருவர் அதன் மீது ஏறி நின்று ஆடி மகிழ்கிறார்.

# அவுஸ்திரேலிய பிரதமர் ஹவார்ட் ஈராக்கிற்கு இரகசியப் பயணம்

அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவார்ட் ஈராக்கிற்கான ரகசிய திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஈராக் சென்றார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அவுஸ்திரேலியப் படையினரை சந்திக்கும் நோக்கிலேயே ஹவார்ட் ஈராக் சென்றிருப்பதாக தெரிய வருகின்றது.

ஈராக்கில் ஷியா பிரிவு கிளர்ச்சிக் குழு மதத்தலைவர் மொகட்டடா சடர், அவுஸ்திரேலியப் படையினர் தொடர்ந்தும் ஈராக்கில் இருப்பார்களானால், அவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படும் என்று கூறியமைக்காக, தமது படைகள் தொடர்ந்தும் ஈராக்கில் கடமை புரியும் என்று கூறிய ஹவார்ட்.

இந்த அச்சுறுத்தலுக்கு எல்லாம் தமது அரசாங்கமும், படையினரும் அடிபணிந்து விடுவார்கள் என்று பெரும்பான்மையான அவுஸ்திரேலியர்கள் எதிர்பார்ப்பார்கள் என்று நான் நம்பவில்லை என்றும் கூறியுள்ளார்.

அத்துடன் ஸ்பெயின் ஈராக்கில் இருந்து தனது படையினரை வாபஸ் பெற்றதை ஹவார்ட் கண்டித்துள்ளார்.

பிரதமரின் ஈராக் விஜயம் ரகசியமாகவே வைக்கப்பட்டு இருந்தது. ஆனால் அவரின் வருகையை அவுஸ்திரேலியப் படையினர் ஏற்கனவே அறிந்து வைத்ததால் பாத்தாத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்தது.

# உலக வங்கி,ஐ.எம்.எப்.பிற்கு எதிராக வாஷிங்டனில் ஆர்ப்பாட்டம்

(வாஷிங்டன்)

வறிய நாடுகளில் உலகவங்கியும் சர்வதேச நாணயச்சபையும் கடைப்பிடித்து வரும் கொள்கையினைக் கண்டித்து ஆயிரக் கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் வாஷிங்டனில் மாபெரும் ஆட்சேபப் பேரணி ஒன்றை நடாத்தியுள்ளனர்.

இந்த ஆட்சேப ஆர்ப்பட்டப் பேரணியின் போது வறிய நாடுகளில் இலாபம் சம்பாதிப்பதை விடுத்து மக்களைக் கவனிக்க வேண்டுமென்ற சுலோகத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கிச் சென்றனர்.

சர்வதேச கடன் வழங்கும் அமைப்புக்களான உலகவங்கியும் சர்வதேச நாணயச்சபையும் வாஷிங்டனில் நடத்திவரும் வருடாந்த கூட்டத்தின் போது இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. உலகளாவிய ரீதியாக கட்டி எழுப்புவதற்கான அமைப்பு ஒன்றே இந்த ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்துள்ளது.

# தேர்தலில் எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது

## -கருத்துக் கணிப்புக்கள் தகவல்

(புதுடில்லி)

மக்களவைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது என்று சில தனியார் தொலைக் காட்சிகளும், பத்திரிகைகளும் நடத்திய கருத்துக் கணிப்பு கூறியுள்ளது.பாரதியஜனதா தலைமையிலான தேசியசனநாயக கூட்டணிக்கு 235-255 இடங்களும், காங்கிரஸ் கூட்டணிக்கு 190-210 இடங்களும், இதர கட்சிகளுக்கு 100-120 இடங்களும் கிடைக்கும் என்று 3 ஆவது கட்ட வாக்குப் பதிவின் பின்னரான கருத்துக் கணிப்புக் கூறியுள்ளது.

# 2,500 ஆண்டுகள் பழமை வாய்ந்த இரு பிரமிட்டுக்கள் கண்டுபிடிப்பு!

(கெய்ரோ)

எகிப்தில் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட இரண்டு வகை பிரமிட்டுக்களை தொல் பொருள் ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

பாலைவன நாடான எகிப்து நாகரிகத்தின் புத்தொளி என்று அழைக்கப்படுகின்றது. ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே பல்வேறு கலைகளிலும் சிறந்து விளங்கியவர்கள் எகிப்து நாட்டவர்கள்.

அதிநவீனவசதிகள் எட்டிப்பார்க்காத பழைய காலத்தில் பிரமிக்கவைக்கும் பிரமிட்டுக்களை உருவாக்கி சாதனை படைத்தனர்.

அந்தவகையில் தொல் பொருள் ஆய்வாளர்கள் புதிதாக இரண்டு பிரமிட்டுக்களை கண்டு பிடித்துள்ளனர் பிரான்ஸ் நாட்டு ஆய்வுக்குழுவினர் கண்டுபிடிக்கப்பட்ட பிரமிட்டுக்களின் உட் புறத்தை ஆய்வு செய்துள்ளனர்.

மரம் கருங்கல் போன்றவற்றினால் ஆன சவப்பெட்டிகளை கண்டுள்ளனர் இவற்றை திறந்து பார்த்த போது ஒருவகை நிறத் துணியால் போர்த்தப்பட்ட பதப் படுத்தப்பட்ட உடல்கள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு வகை பிரமிட்டுக்களிலும் இதே போன்று 50 பதப்படுத்தப்பட்ட உடல்கள் உள்ளன. சவப்பெட்டிகளின் மேற்புறம் தங்கத்தினால் மனித உருவைப் போன்று அமைக்கபட்டுள்ளது.



சகாராவில் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள 2,500 ஆண்டு பழமை வாய்ந்த எகிப்திய மம்மி.

# குட்டு கிளர்ச்சியாளரினால் 19 பொதுமக்கள் படுகொலை

கொங்கோவின் கிழக்குப் பகுதியில் றுவாண்டாவின் குட்டு கிளாச்சியாளர்களினால் 19 பொது மக்கள் கொலை செய்யப் பட்டுள்ளனர்.

கொங்கோ சனநாயகக்குடியரசின் யூலீசா மற்றும் தென்சியூ மாநிலங்களில் இந்த குட்டு கிளர்ச்சியாளர்கள் பாரிய அளவில் செயற்படுவதாக யூலீசா மாநில நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமது பகுதிகளில் இருந்து றுவாண்டாப் படைகளை வெளியேற்றுவது தொடர்பாக ஆராய ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையுடன் கூட்டமொன்றை நடத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக கொங்கோ அரசின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.



இந்தியப்பாராளுமன்றத் தேர்தல் பிரச்சாரம்.

# தமிழகத்தில் அ.தி.மு.க அரசிற்கு எதிராக மிகப் பெரிய் எழுச்சி ஏற்பட்டுள்ளது

## - வை.கோபாலசாமி தெரிவிப்பு

(சென்னை)

அ.தி.மு.க. அரசுக்கு எதிராக மாநிலத்தில் மிகப் பெரியஎழுச்சி ஏற்பட்டுள்ளது என்று வைகோ கூறியுள்ளார்.

வடசென்னையில் தேர்தல் பிரச்சாரத்தில் கலந்து கொண்ட வைகோ.

1967 ஆம் ஆண்டு அண்ணா உருவாக்கிய கூட்டணி தமிழ் நாட்டில் மிகப்பெரிய அரசியல் மாற்றத்திற்கு வித்திட்டது இதே போல் தி.மு.க. தலைவர் கருணாநிதி அமைத்துள்ள கூட்டணியும் மாற்றத்திற்கு வித்திடும். என்றும் அவர் கூறி யுள்ளார்.

இதேவேளை தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான முற்போக்கு கூட்டணி போல் எந்த மாநிலத்திலும் வலுவான கூட்டணி அமைக்கப்படவில்லை என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

பிரம்பலூரில் பிரச்சாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தமது கூட்டணி தமிழகம் புதுவையில் 40 தொகுதிகளிலும் வெற்றிபெறும் என்றும் அவர் கூறியுள்ளார். நாட்டில் மக்களது உரிமைகள் பறிக்கப்படக்கூடாது என்று கூறிய அவர் அவ்வாறு பறிக்கப் பட்டால் தி.மு.க. கூட்டணி குரல் கொடுக்கும் என்றும் தெரிவித் துள்ளார்.

# தேசிய சனநாயகக் கூட்டணி தி.மு.க.வின் உதவியை நாடாது

## - பா.ஜ.க. அறிவிப்பு

(சென்னை)

மக்களவைத் தேர்தலில் தேசிய சனநாயகக் கூட்டணிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் திராவிட முன்னேற்றக்கழகம் (தி.மு.க) ஆதரவாகக் கேட்கும் பிரச்சனைக்கே இடமில்லை என்று பாரதிய ஜனதா கட்சியின் அகில இந்தியச் செயலாளர் இல.கணேசன் கூறியுள்ளார்.

சென்னையில் செய்திளாரிடம் பேசிய அவர் தேர்தலுக்குப் பின்னர் தேசிய சனநாயகக் கூட்டணியில் இல்லாத கட்சிகளிடம் ஆதரவு கேட்கப்படும் என்று பிரதமர் வாஜ்பாய் அறிவித்திருப்பது திரவிடக் கட்சியினைக் குறிப்பிட்டு அல்ல என்று அவர் கூறினார்.

பாட்டாளிமக்கள் கட்சி போட்டியிடும் 6 தொகுதிகளையும் பதற்றம் நிறைந்த தொகுதிகளாக தேர்தல் ஆணையாளர் அறிவிக்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

# மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு கிழக்கு மாகாண சபை

# போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (காரப்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது.
"ஆஅவ" கடன் இல 2043 - SRI (SF)

# கேள்வி கோரல் - இல.01

# குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து "ஆஅவ" கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில்தருனராக குறிப்பிடப்படும் (CAARP) கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட கேள்விச்சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | MU/CAARP/ED/01 | பெரியகுளம் அ.த.க.பாடசாலையில் 120'X25' வகுப்பறைக்கட்டடம் மீள நிர்மாணித்தல் | M 7 | 25000.00 |
| 02 | MU/CAARP/ED/02 | சிவநகர் தமிழ் வித்தியாலயத்தில் 120'X25' வகுப்பறைக்கட்டடமும் அலுவலக அறையும், அதிபர் அறையும் நிர்மாணித்தல். | M 7 | 25000.00 |
| 03 | MU/CAARP/ED/03 | நெத்தலியாறு தமிழ் வித்தியாலயத்தில் 120'X25' வகுப்பறைக்கட்டடமும் அலுவலக அறையும், அதிபர் அறையும் நிர்மாணித்தல். | M 7 | 25000.00 |
| 04 | MU/CAARP/ED/04 | முல்லைத்தீவு இந்து தமிழ் கலவன் பாடசாலையில் 120'X25' வகுப்பறைக்கட்டடமும் அலுவலக அறையும் நிர்மாணித்தல். | M7 | 25000.00 |
| 05 | MU/CAARP/ED/05 | ஒதியமலை தமிழ் வித்தியாலயத்தில் 120'X25' வகுப்பறைக்கட்டடம் மீளநிர்மாணித்தல். | M 7 | 25000.00 |
| 06 | MU/CAARP/ED/06 | அனஞ்சியான் குளம் தமிழ் வித்தியாலயத்தில் இரண்டு 120'X25' வகுப்பறைக்கட்டடமும் அலுவலக அறையும், மீளநிர்மாணித்தல். | M 7 | 50000.00 |
| 07 | MU/CAARP/ED/07 | காதலியார் சமளன் குளம் அ.த.க. பாடசாலையில் 120'X25' வகுப்பறைக்கட்டடம் மீள நிர்மாணித்தல். | M 7 | 25000.00 |
| 08 | MU/CAARP/ED/08 | கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் இரண்டு 120'X25' வகுப்பறைக்கட்டடம் மீளநிர்மாணித்தல் | M 7 | 50000.00 |
| 09 | MU/CAARP/ED/09 | பனங்காமம் புவரசங்குளம் அ.த.க.பாடசாலையில் 120'X25' வகுப்பறைக்கட்டடம் நிர்மாணித்தல். | M 7 | 25000.00 |
| 10 | MU/CAARP/ED/10 | ஒலுமடு தமிழ் வித்தியாலயத்தில் 120'X25' வகுப்பறைக்கட்டடங்கள் மீள நிர்மாணித்தல் | M 7 | 25000.00 |
| 11 | MU/CAARP/ED/11 | கரிப்பட்ட முறிப்பு அ.த.க. பாடசாலையில் 120'X25' வகுப்பறைக்கட்டடமும், அலுவலக அறையும் மீள நிர்மாணித்தல். | M 7 | 25000.00 |
| 12 | MU/CAARP/ED/12 | முத்து ஐயன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலையில் இரண்டு120'X25' வகுப்பறைக்கட்டடங்கள் நிர்மாணித்தல் | M 7 | 50000.00 |
| 13 | MU/CAARP/ED/13 | சுதந்திர புரம் அ.த.க.பாடசாலையில் 120'X25' வகுப்பறைக்கட்டடமும் அலுவலக அறையும் நிர்மாணித்தல். | M 7 | 25000.00 |
| 14 | MU/CAARP/ED/14 | விநாயகபுரம் அ.த.க பாடசாலையில் 120'X25' வகுப்பறைக்கட்டடம் மீளநிர்மாணித்தல். | M 7 | 25000.00 |
| 15 | MU/CAARP/CL/01 | முல்லைத்தீவில் உணவுக்களஞ்சியம் மீளநிர்மாணித்தல். | M 6 | 60000.00 |
| 16 | MU/CAARP/IIS/02 | மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக நிர்மாணத்தை நிறைவு செய்தல். | M 6 | 57000.00 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

i. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ii. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD டுடன் மேற்படி M7 இற்கு பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

iii. கடந்த ஐந்து வருடங்களில் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்கள் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும், இது வாடிக்கை யாளர்களிடமிருந்து அத்துடன்/ அல்லது உசாவலர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படல்வேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 01.07.2003ற்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டில் வசிக்கும் ஓய்வூதியர்கள் வருடாந்தம் உயிர்வாழ்வதை உறுதிசெய்க!

## -யாழ். அரச அதிபர் பணிப்பு

**வெளிநாட்டில் வசித்துவரும் இலங்கையில் ஓய்வூதியம் பெறுவோர் வருடத்திற்கு ஒரு முறையாவது தாம் உயிர்வாழ்வதை தாங்கள் வாழும் நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்குச் சென்று உறுதிப்படுத்த வேண்டுமென யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கேட்டுள்ளார்.**

அவர் இந்த அறிவுறுத்தலில் மேலும் குறிப்பிடுகையில்:

வெளிநாட்டில் இருந்து கொண்டு இலங்கையில் ஓய்வூதியம் பெறுவோர் இவ்வாறு உறுதிப்படுத்திய பின்னரே அவர் களுக்கான ஓய்வூதியம் வழங்கப்படும் எனவும்,

இதேவேளை இந்த நடைமுறை எதிர்வரும் மேமாதம் முதல் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ். அரசாங்க அதிபர் ஓய்வூதியம் தொடர்பாக பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைத்த சுற்று நிருபத்திலேயே இவ்வாறு தெரி வித்துள்ளார்.

வெளிநாட்டில் இருந்து ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களின் ஓய்வூதியங்கள் நேரடியாக வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு வங்கிகளினால் அவர்களுடைய கணக்கில் வரவு வைக்கப்பட்டு வந்தது.

இந்த ஓய்வூதியர்களின் உயிர் வாழ்வு தொடர்பான பத்திரங்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு வங்கிகளினால் உறுதிப்படுத்தப்பட்டு வந்தது. தற்போது இந்த நடைமுறை நிறுத்தப்படவேண்டுமென அரச அதிபர் பிரதேச செயலர்களுக்கு அறிவிததுள்ளார்.

ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர் பான முழு அதிகாரமும் பிரதேச செயலகங்களுக்கே வழங்கப் பட்டு ள்ளது எனவும் வங்கிகள் கொடுப் பனவை மட்டுமே வழங்க முடியு மெனவும் ஏனைய வேலைகளுக்கு வங்கிகள் பொறுப்பாயிருக்க முடியாதெனவும் அவர் தனது சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் அமைச்சருக்கு பிணை வழங்கல்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மகிந்த விஜயசேகரவை நேற்று முன்தின மாத்தளை நீதவான் சரீர பிணையில் செல்ல அ மதித்துள்ளார். கடந்த தேர்தல் லில் இடம்பெற்ற வன்முறை தொடர்பில் இவர் நீதிமன்றுக் ஆஜராயிருந்தார். (32)

# மன்னாரில் மே தினத்தை கொண்டாட கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் நகரில் தொழிலாளர் தினத்தை சிறப்புறக் கொண்டாட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இனியவன் தலைமையில் இடம் பெற்ற. மேற்படி கலந்துரையாடலில் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும கலந்து கொண்டனர். (மி)

## -குடாநாட்டில் வறுமை காரணமாக-

# பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவரை இணைக்க தமிழீழ மாணவர் ஒன்றியம் முயற்சி

யாழ்.மாவட்டத்தில் வறுமை காரணமாக பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கான செயற்திட்டங்களில் தமிழீழ மாணவர் ஒன்றியம் ஈடுபட்டு வருகின்றது.

கடந்த காலத்தில் யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளாலும் அதன் விளைவுகளாலும் மக்களின் பொருளாதார நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக ஆயிரக் கணக்கான கற்கும் வயதுடைய சிறார்கள் தமது கற்றலை இடை நிறுத்தியுள்ளனர்.

இவ்வாறு வறுமை காரணமாக கல்வியை இடைநிறுத்தியுள்ள மாணவர்களை மீண்டும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் விதமாக தமிழீழ மாணவர் ஒன்றியத்தினர் பாதிக்கப்பட்ட மாணவர்கள் வாழும் பிரதேசங்களுக்கு நேரில சென்று விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருவதுடன் பாதிக்கப்பட்ட மாணவர்களை இனம்கண்டு அவர்களின் கல்விக்கு உதவிகளையும் செய்து வருகின்றனர். (33)

## நாயாற்று மக்களுக்கு குடிநீர் வழங்க ஏற்பாடு

(முல்லைத்தீவு)

நாயாற்றுப்பகுதி மக்களுக்கு கடந்த 23ஆம் திகதி தொடக்கம் நீர்த்தாங்கிமூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது நாயாற்றுப்பகுதியில் ஒரு தோட்டத்தில் குடி நீருக்கு பாவிக்கக்கூடிய கிணறு ஒன்று இருந்ததினால் அதனை அப்பகுதி கிராம அலுவலரின் ஒழுங்குபடுத்தலில் தமிழீழ நிர்வாக சேவையின் முல்லைமாவட்ட நிர்வாக அலுவலர் பொன்னுச்சாமியின் ஒத்துழைப்புடன் மக்கள் சிரமதானப் பணியினைக்கடந்த 25ஆம் திகதி மேற்கொண்டனர். இதில் சுமார் 50பேர் கலந்துகொண்டு சிரமதானப் பணியைமேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## மூவர் பலி

(கொழும்பு)

கம்பளைப் பகுதியைச் சேர்ந்த மூவர் மகாவலி கங்கையில் குளித்துக் கொண்டிருந்த போது இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்களில் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன மற்றொருவரின் சடலம் மீட்கப் படவில்லை. இவரைத் தேடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (32)

## மன்னாரில் மழை

கடும் வரட்சி நிலவிய மன்னார் நகரத்தில் நேற்றுமுன்தினம் பி.ப 3.00 மணிமுதல் கடும் மழைபெய் தது. இதனால் மன்னாரில் நிலவிய கடும் வெயிலின் தாக் கம் அடங்கியுள்ளது. நேற்று முன் தினம் மழை வீழ்ச்சி 34.5மி.மீ ஆகும். (மி)



அதிவேகமாகவந்த உழவு இயந்திரத்தினை சாரதி அதேவேகத்தில் மறு வீதிக்கு திருப்புகையில் சாரதியின் கட்டுப்பாட்டினை மீறி வீதியின் அருகிலிருந்த வாய்க்காலில் உழவுஇயந்திரம் இழுவைப் பெட்டியுடன் விழுந்து வேலிகளை உடைத்துக் கொண்டு காணி ஒன்றினுள் புகுந்து நிற்பதைப் படத்தில் காணலாம் இச் சம்பவம் கிளிநொச்சி செல்வாநகர்ப் பகுதியில் கடந்த ஞாயிறன்று நடைபெற்றமை தெரிந்ததே. (படம்-சோதி),

## -ஒட்டுசுட்டான் அரச அதிபர் பிரிவு-

# தட கள விளையாட்டுப் போட்டிகளில் பண்டார வன்னியன் கழகம் முதலிடம்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதி யில் கழகங்களுக்கிடையேயான தடகள விளையாட்டு போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

மாலை 2.30 மணியளவில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் திருமதி ந.செல்வராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மங்கள விளக்கினை நீர்ப்பாசனப் பொறியியலாளர் மு.சண்முகராசா,திலீபன் மருத்துவமனை மருத்துவர் வசந்தி மாலா ஆகியோர் ஏற்ற தேசியக் கொடியினை ஒட்டுசுட்டான் அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈழவன் ஏற்றி வைத்தார். பிரதேச செயலக கொடியினை ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் திருமதி ந.செல்வராசா ஏற்றியதைத் தொடர்ந்து சமநேரத்தில் கழகங்களின் கொடிகளைக் கழகங்களின் முதல்வர்கள் ஏற்றினர்.

விளையாட்டுப் போட்டியினை முல்லை மாவட்ட விளையாட்டுத் துறை உத்தியோகஸ்தர் ஜேம்ஸ் அன்ரனிகுரூஸ் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி ஆரம்பித்து வைத்தார்.

முன்னர் நடந்த பெரு விளையாட்டுகளில் கரப்பந்து (ஆண்கள்) பரந்தாமன் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும் பண்டாரவன்னியன் விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும்,பெண்கள் பிரிவில் சம்மனங்குளம் பாரதி விளையாட்டு கழகம் முதலாம் இடத்தையும் முத்துஐயன்கட்டு பாரதி விளையாட்டு கழகம் இரண்டாம் இடத்தையும் கபடி போட்டியில் ஆண்கள் பிரிவில பாரதி சம்மனங்குளம் முதலாம் இடத்தையும் பண்டார வன்னியன் இரண்டாம் இடத்தை யும்; பெண்கள் பிரிவில் முத்து ஐயன்கட்டு பாரதிமுதலாம் இடத் தையும் எல்லே விளையாட்டில் ஆண், பெண் பிரிவில் பண்டார வன்னியன் முதலாம் இடத்தையும் சம்மனங்குளம் இரண்டாம் இடத்தையும்; வலைப்பந்து முத்து ஐயன்கட்டு பாரதி முதலாம் இடத்தையும், ஈஸ்வரன் இரண்டாம் இடத்தையும்; துப்பாட்டத்தில் மின்னொளி முதலாம் இடத்தையும்; பண்டார வன்னியன் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

இறுதியில் பண்டாரவன்னியன் கழகம் 233 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும்; 105 புள்ளிகளைப் பெற்று சம்மனங்குளம் பாரதி கழகம் இரண்டாம் இடத்தையும் முத்துஐயன்கட்டு பாரதி 78 புள்ளிகளை பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

பரிசில்களை பிரதம விருந்தினர்களும் உத்தியோகஸ்தர்களும வழங்கிக்கௌரவித்தனர். (05)



பிரதம விருந்தினராக நீர்ப்பாசன பொறியியலாளர் மு.சண்முகராசா வெற்றிக்கிண்ணத்தை பண்டார வன்னியன் கழகத் தலைவரிடம் வழங்குகின்றார்.

# கண்டாவளை கிராம சேவையாளர்களுடன் பிரதேச காவல்துறைப் பொறுப்பதிகாரி சந்திப்பு

(வட்டக்கச்சி)

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர்களை வட்டக்கச்சி பிரதேச தமிழீழ காவல் பணிமனைப் பொறுப்பாளர் சுந்தரலிங்கன் கடந்த புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடி யுள்ளார்.

மேற்படி இக்கலந்துரையாடலானது காலை 10.00மணிக்கு கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் சிவசொருபநாதபிள்ளை தலைமையில் ஆரம்பமானது. காவல்பணிமனைப் பொறுப்பாளர் கருத்துரை வழங்கும் போது சமகாலத்துடன் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட சில விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டது.

கண்டாவளை ம/வி கேட்போர் கூடத்தில் வெள்ளியன்று பிரதேச கிராமசேவையாளர் வீரசிங்கம் தலைமையில் இடம் பெற்ற கலந்துரையாடலிலும் கருத்துரைகளை வட்டக்கச்சிப் பிரதேச காவற் பணிமனைப் பொறுப்பாளர் வழங்கியதோடு பலவிடயங் கள் குறித்தும் ஆராயப்பட்டது. (12)

## சாவகச்சேரி நகருக்கு அண்மையில்

# பழைய பொலிஸ் நிலைய வளாகத்தில் படைமுகாம் அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பழைய பொலிஸ நிலைய வளாகத்தினுள் படைமுகாம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

சாவகச்சேரி நகரை அண்டியுள்ள மேற்படி பொலிஸ் நிலைய வளாகம் நீண்டகாலமாக கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டு வருகிறது. இதனை தற்பொழுது படைமுகாம் அமைக்கும் நோக்குடன் படையினர் துப்பரவு செய்து வருவதாகத் தெரியவரு கிறது. மக்கள் நடமாட்டம் நிறைந்த சாவகச்சேரி பிரதான நகரை அண்மித்து படையினர் புதியதொரு முகாமை அமைக்க முயற்சி செய்வது மக்களது இயல்பு வாழ்வை பெரிதும் பாதிப்பதாக அமை வதால் இதற்கு பலரும ஆட்சேபம் தெரிவித்து வருகின்றதுடன் படையினர் இம் முயற்சிகளைக் கைவிடவேண்டும் எனவும் கோரியுள்ளனர். (33)

உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு.
வடக்கு - கிழக்கு மாகாணசபை
போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனர்வாழ்வுத் திட்டம்
(காார்ப்)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல. 2043 - SRI (SF)
(பகுதி C - சமுதாய மீளமைப்பும் அபிவிருத்தியும்)

# கேள்வி அறிவித்தல் 01

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனர்வாழ்வுத் திட்டத்தின் (CAAR) ஆகு செலவு சார்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்காக இந்தக் கடனின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது..

02. இதன் பின்னகத்து தொழில் தருனராக குறிப்பிடப்படும் (CAAR), கருத்திட்ட கேள்விச்சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | ஆகக் குறைந்த ITCAD பதிவு | கேள்விப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | கே என்/கார்ப்/ஈடி/02 | கிளி/சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் 9வகுப்பறைகளும் அதிபர் அலுவலகமும் கொண்ட 110'X25' இருமாடிக்கட்டட நிர்மாணம் | எம் 7 | 42000.00 |
| 02 | கே என்/கார்ப்/ஈடி/03 | கிளி/பூநகரி ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயத்தில் 9வகுப்பறைகளும், அதிபர் அலுவலகமும் கொண்ட 110'X25' இருமாடிக் கட்டட நிர்மாணம். | எம் 7 | 42000.00 |
| 03 | கே என்/கார்ப்/ஈடி/04 | கிளி/சிவபாதகலையகம் அ.த.க.பாடசாலையில் 9 வகுப்பறைகளும், அதிபர் அலுவலகமும் கொண்ட 110'X25' இருமாடிக் கட்டட நிர்மாணம் | எம் 7 | 42000.00 |
| 04 | கே என்/கார்ப்/ஈடி/05. | கிளி/இரணைதீவு றோ.க.த.க. பாடசாலையில் 9 வகுப்பறைகளும் ,அதிபர் அலுவலகமும் கொண்ட 110'X25' இருமாடிக் கட்டட நிர்மாணம் | எம் 7 | 42000.00 |
| 05 | கே என்/கார்ப்/ஈடி/06 | கிளி/ஜெயபுரம் அ.த.க.பாடசாலையில் 9 வகுப்பறைகளும் , அதிபர் அலுவலகமும் கொண்ட 110'X25' இருமாடிக் கட்டட நிர்மாணம் | எம் 7 | 42000.00 |
| 06 | கே என்/கார்ப்/ஈடி/07 | கிளி/கனகபுரம் மகாவித்தியாலயத்தில் 9 வகுப்பறைகளும், அதிபர் அலுவலகமும் கொண்ட 110'X25' இருமாடிக் கட்டட நிர்மாணம் | எம் 7 | 42000.00 |
| 07 | கே என்/கார்ப்/ஈடி/08 | கிளி/பாரதிபுரம் வித்தியாலயத்தில் 9 வகுப்பறைகளும் அதிபர் அலுவலகமும் கொண்ட 110'X25' இருமாடிக் கட்டட நிர்மாணம் | எம் 7 | 42000.00 |

03 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால்(ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக் காரர், பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

II. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் 2003 யூலை 01ஆம் திகதிக்குப் பின்பு தங்களைப் பதிவு செய்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர்கள் இதுபோன்ற வேலைகளை அல்லது இதற்குச் சமமான வேலைகளை ஒப்பந்தக் காரர்களாக அல்லது உபஒப்பந்தக்காரர்களாகச் செய்திருத்தல் வேண்டும் இதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/ அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

III. இச்சாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி கோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

IV. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்தியற்ற வேலை செய்தமைக்கு உட்பட்டவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

V. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்கவேண்டும்.

04. மேற்படி பந்தி 02இல் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்விகள் கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமைய வேண்டும். ஏதேனும் ஒப்பந்தக் காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை "கார்ப்" திட்டத்தின் கீழ் நடைமுறையில் இருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும். அல்லது 2003யூலை 01ஆம் திகதிக்குப் பின்பு தங்களைப் பதிவு செய்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒப்பந்தக் காரர்கள் இது போன்ற வேலைகளை அல்லது இதற்கு சமமானவேலைகளை ஒப்பந்தக் காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகச் செய்திருந்தால் "கார்ப்" திட்டத்தின் கீழ் ஒருநேரத்தில் ஆகக்கூடுதலாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒப்பந்தம் ஒன்றாகும்.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களைக் கேள்விப் படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு,– கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்,(நிகொட்) மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்றவிலாசத்தில் உள்ள மாவட்டப் பிரதித் திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# கடந்த வாரத்தில்...

## 19.04.2004-25.04.2004

➡ தியாகதீபம் அன்னை பூபதியின் 16ஆம் ஆண்டு நினைவுநாளின் இறுதிநாள் நிகழ்வுகள் தமிழீழமெங்கும் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.



நினைவு நிகழ்வில்...

➡ பொருண்மிய மதியுரையகத்தின் 2004-2006இற்கான ஐந்துநாள் ஆய்வரங்கின் முதலாம் நாள் நிகழ்வுகள் ஆரம்பம்.

➡ ஈராக்கில் உள்ள ஜப்பானியப் படையினர் உடனடியாக மீள அழைக்கப்பட வேண்டும் எனக்கோரி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.




டோக்கியோவில் ஆர்ப்பாட்டம்...

➡ 1979இல் கடற்படையில் இணைக்கப்பட்ட அமெரிக்க கடற்படையின் ஏவுகணைத் தாங்கி நாசகாரி போர்க்கப்பலான யு.எஸ்.எஸ்.குஷங்(டிப85) கொழும்புத் துறைமுகம் வந்தடைந்தது.

➡ வடகொரிய சனாதிபதி பியோங் ஜோங்கில் சீன சனாதிபதி கு.ஜின்ரோபை இரகசியமாகச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

➡ விண்வெளியில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு ரஷ்யாவின் சோயுஸ் விண்கலம் மூலம் விண்வெளி வீரர்கள் பயணமாகினர்.

➡ நாஸிகளினால் கொல்லப்பட்ட 60இலட்சம் யூதர்களின் நினைவுத்தூபிக்கு இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல்ஷரோன் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

**20.**

➡ தமிழீழ தேசியத்தலைவர் அவர்களையும், மற்றும்,தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான், தளபதி சொர்ணம், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, மகளிர் படையணித்தளபதிகளான கேணல் விதுஷா, கேணல் துர்க்கா, அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி ஆகியோரையும் தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துக்கலந் துரையாடினர்.



கலந்துரையாடல்...

➡ தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களை மலையக மக்கள் முன்னணித்தலைவர் பெ.சந்திரசேகரன், மேல் மாகாண மக்கள் முன்னணித்தலைவர் மனோ கணேசன் ஆகியோர் தனித்தனியே சந்தித்து தற்போதைய அரசியல் நிலவரம் குறித்துக் கலந்துரையாடினர்.



மனோகணேசனுடன்...



சந்திரசேகரனுடன்...

➡ இந்தியாவின் நாடாளுமன்றத் தேர்தலுக்கான முதற்கட்ட வாக்குப் பதிவு 13 மாநிலங்களில் நடைபெற்ற வேளை பல்வேறு இடங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் 22பேர் உயிரிழந்தனர். 200 பேர் காயமடைந்தனர்.

➡ ஈராக்கின் மேற்கு பாக்தாத் நகர சிறைச்சாலை ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 21கைதிகள் பலி, 100பேர் காயம்.

**21.**

➡ முல்லை மாவட்ட அரசியல்துறை செயலகம் புதுக்குடியிருப்பில் திறக்கப்பட்ட நிகழ்வில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

➡ ஈராக்கின் பஸ்ரா நகரில் உள்ள பொலிஸ் நிலையங்கள் மீது தீவிரவாதிகள் ஏவுகணைகளை வீசியும், கார்க்குண்டுகளை வெடிக்கச்செய்தும் தாக்குதல் நடத்தியதில் 61பேர் கொல்லப்பட்டனர், 100பேர் காயமடைந்தனர்.

➡ சவுதி அரேபியாவின் மத்திய தாசிரியா மாவட்டத்தில் உள்ள றியாட்டில் பொதுச் செயலாளர் கட்டடத்திற்கு அண்மையில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் 10இற்கு மேற்பட்டோர் பலி.


➡ இஸ்ரேலில் அணுஆயுதத் தயாரிப்புக்கு எதிராகப் போராடி வந்தவரான மோடெசைவனு 18வருட சிறைவாழ்வின் பின் விடுதலை செய்யப்பட்டார்.

➡ காஸாவில் இஸ்ரேலியப் படையினருக்கும், பலஸ்தீனர்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் பலஸ்தீன இளைஞர்கள் 5பேர் பலி, 25பேர் காயம்.

➡ அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சே.பத்மநாதனின் அலுவலகம் இனம் தெரியாதோரால் தீக்கிரை.

**22**

➡ இலங்கையின் புதிய சபாநாயகராக எதிர்க்கட்சிகள் தரப்பில் நிறுத்தப்பட்ட மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் லொக்கு பண்டார ஒரு மேலதிக வாக்கினால் தெரிவானார்.



➡ பாஜ் மற்றும் நிடோ நிறுவனங்கள் இணைந்து நடாத்தும் தொழில்நுட்ப நிறுவனத்தின் செயற்பாடுகளை யு.என்.எச்.சி.ஆர். பிரதி நிதிகள் பார்வையிட்டனர்.

➡ தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், அரசசார்பற்ற நிறுவன இணைப்பாளர் மு.பாவரசன் (தியாகராஜன்) த.வி.புலிகளின் திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் தூயவன் ஆகியோரை ஐ.நா.பிரதிநிதிகள் சந்தித்து தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து ஆராய்ந்தனர்.



ஐநா பிரதிநிதிகளுடன்...

➡ வடகொரிய நகரான பியோங் ஜோங்கிலிருந்து 50 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள ரைபொங் கொன் ரயில் நிலையத்தில் கைதிகளையும், எரிபொருளையும் ஏற்றிவந்த ரயில்கள் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதியதில் 54 பேர் பலி, 1500 பேர் காயம் 6850 குடியிருப்புகள் அழிந்தன.



கோரவிபத்து...

➡ மேற்கு சீன மாநிலமான அனுஹியில் பாவனைக்குதவாத பால்மாவினால் தயாரிக்கப்பட்ட பாலை அருந்திய 13 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழப்பு.

**23**

➡ ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஜினதாஸ பீரிஸ் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியினை இராஜினாமாச் செய்தார்.

**24**

➡ 52 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 803 பேர் போட்டியிடும் வடமேல் மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றது.

➡ ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 8 ஈராக்கிய மக்கள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

**25**

➡ தலைமைச் செயலகங்களுடனான தொடர்புகளை பொதுமக்கள் ஏற்படுத்திக் கொள்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தால் மட்டக்களப்பு இலுப்படிச்சேனையில் உப அலுவலகம் ஒன்று திறந்துவைக்கப்பட்டது.

➡ மன்னார் அடம்பன் தியாகதீபம் மருத்துவ சேவையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சிறப்புரையாற் றினார்.

➡ மாகாண உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ஜனகபண்டார தென்னக் கோன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

# சவூதியில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட 10 பெண்கள் உட்பட 72 இலங்கையர் நாடு திரும்பினர்

சவூதி அரேபியாவில் பொலிசாரினால் கைது செய்யப் பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 10 பெண்கள் உட்பட 72 இலங்கையர்கள் நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளனர்.

நாடுதிரும்பியோர் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் தொழில் முகவர்கள் வாக்குறுதியளித்த தொழில்களை பெற்றுக் கொடுக்கவோ அல்லது எமது பிரச்சினைகளை ஆராய்வதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் நாம்வேறு தொழில்களில் ஈடுபட்டோம் அத்துடன் சிலருக்குத் தகுந்த சம்பளங்களும் வழங்கப்படவில்லை.

இக்குறைகளைக் கேட்க முற்பட்ட வேளை பொலிசார் எம்மை கைது செய்தனர் என தெரிவித்துள்ளனர்.

# கணவனை இழந்த பெண்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு கடனுதவி

(அலுவலக செய்தியாளர்)

கணவனை இழந்த இளம் விதவைகளுக்கு சுயதொழில் நடவடிக்கையினை மேற்கொள்ளும் வகையில் கரைச்சி பிரதேச செயலகத்தினால் மீளளிப்புக்கடன் வழங்கப் பெற்றது.

கடந்த 23ஆம் திகதியன்று கணவனை இழந்த 25 இளம் விதவைகளுக்கு சுயதொழிலினை மேற்கொள்ளும் வகையில் தலா 4500 ரூபா வீதம் மீளளிப்புக் கடனாக வழங்கப்பெற்றது.

கரைச்சி பிரதேச செயலர் பொன் நித்தியானந்தன் மேற்படி கொடுப்பனவுகளை அன்றைய தினம் வழங்கிவைத்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# முன்னோடிக் கல்வி வலயங்களாக வவுனியா தெற்குமன்னார் தெரிவு

(வவுனியா செய்தியாளர்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் முன்னோடி கல்வி வலயங்களுள் ஒன்றாக வவுனியா தெற்கு கல்வி வலயம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கல்வி,மனிதவள கலா சார அமைச்சினால் பொதுக்கல்விச் சீர்திருத்தத் திற்கமைய நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பாடசாலை மீள்வியூக சீரமைப்பில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வவுனியா தெற்கு,மன்னார், அம்பாறை,சம்மாந்துறை ஆகிய நான்கு கல்வி வலயங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இக்கல்வி வலயங்களில் பாடசாலை மீள்வியூக அமைப்பின் கீழ் புதிய பாடசாலைகள் அமைத்தல், பாடசாலைகளைத் தரம் உயர்த்தல், ஏனைய வசதிகளை அதிகரித்தல் ஆகிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மாகாண கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (10).

# கண்ணகை அம்மன் ஆலய புதிய கட்டட அடிக்கல் நாட்டல்

பரந்தன் உமையாள் புரத்தில் அமைந்துள்ள கண்ணகை அம்மன் ஆலயத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா நாளை 29ஆம் திகதி வியாழக் கிழமை பகல் 12 மணிக்கு நடை பெறவுள்ளது. இவ்விழாவில் அம்பாள் அடி யார்கள் தவறாது கலந்து சிறப்பிக்குமாறும், தொடர்ந்து நடை பெறும் ஆலயத் திருப்பணிக்கு உதவுமாறும் ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர்.

# என்னுடன் தடுத்து வைக்கப்பட்டிருந்தோர் பலர் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர்

## -18வருடம் சிறையிலிருந்து தப்பிவந்தவர் அதிர்ச்சித் தகவல்

"பதினெட்டு வருடங்களாக இருண்ட உலகில் இருந்து ஆவலுடன் எனது உறவுகளைப்பார்க்கும் ஆசையுடன் ஓடி வந்தேன். ஆனால் நான் தேடிவந்த உறவுகளை இங்கு காண முடியவில்லை" என்றார், சிறிலங்கா விஷேட அதிரடிப்படையினரால் கடந்த 1986ஆம் ஆண்டு களுவாஞ்சிக்குடியில் வைத்து கைது செய்யப்பட்டு சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த வேளை தப்பிவந்துள்ள வரான மட்டக்களப்பு சித்தாண்டி முருகன் கோவிலடியைச் சேர்ந்த கனகரத்தினம் சண்முகநாதன்.

அவர் தனக்கு நேர்ந்த அவலம் தொடர்பாக மேலும் தெரிவிக்கும் போது;

நான் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து 18 வருடங்களின் பின்னர் ஒருவாறு தப்பியோடி வந்தேன். ஆனால் என்னை என்னுடைய ஊரில் யாரும் அடையாளம் காணவில்லை.

படையினரால் நான் கைது செய்யப்படும் போது எனது மகள் இரண்டு வயதுக்குழந்தையாக இருந்தார் தற்போது என்னுடைய மனைவி இறந்துவிட்டார் என்பது இங்கு வந்தபின்னர்தான் எனக்குத் தெரியவந்தது.

ஆனால் ஒருவாறு ஊராரின் உதவியுடன் என்னுடைய மகளைப் பார்க்கச் சென்றேன். ஆனால் முதலில் என்னை மகள் தனது தந்தை என ஏற்க மறுத்துவிட்டார். இதைவிட ஒருமனிதனுக்கு வேதனையான விடயம் என்ன இருக்க முடியும் என்றார்.

தான் கைதுசெய்யப்பட்ட சமயம் முதல் தொடராக நடந்த விடயங்கள் பற்றி அவர் விபரிக்கையில்:

சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரின் களுவாஞ்சிக்குடி சோதனைச் சாவடியில் வைத்து 1986ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டேன். அங்கிருந்து குருவிற்ற இராணுவ முகாமிற்குச் கொண்டு செல்லப்பட்டேன். என்னைக கொண்டு செல்லும் போது என்னுடன் கைது செய்யப்பட்ட பலரையும் கொண்டு வந்தார்கள்.

அம்பாறைக்கு கொண்டுவரப் பட்ட பின்னர் அங்கு வைத்தும் சித்திரவதை செய்தார்கள். பின்னர் என்னுடன் கொண்டு வரப்பட்டவர்களில் சுமார் இருபத்தைந்து பேர் வரை அம்பாறையில் வைத்து அதிரடிப்படையினரால் கண்முடித்தனமாகச் சுட்டுக்கொல் லப்பட்டனர்.

பின்னர் என்னை அங்கிருந்து கொண்டுசென்று முகாம் ஒன்றில் தடுத்து வைத்திருந்தார்கள். அங்கு என்னுடன் சேர்த்து 300பேர்வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் பலர் 1990ஆம் ஆண்டு ஆரம்பகாலத்தில் வடக்கு-கிழக்கில் இராணுவத்திற்கு எதிராக தாக்குதல் நடைபெறும் போது சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

1990ஆம் ஆண்டு ஒகஸ்ட்மாதம் ஐந்தாம் திகதி கிழக்குப் பல்கலைக் கழக முகாமில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட 158பேரில் மூன்று பேர் நான் அடைத்து வைக்கப் பட்டிருந்த இடத்தில் இப்போதும் இருக்கின்றனர்.

கொம்மாந்துறையைச் சேர்ந்த நாகலிங்கம் அருளாநந்தராசா, கண்டுமணி யோகேஸ்வரன், சிகாமணி புவிக்கமலன் ஆகியோரே அங்குள்ளனர். என்னால் நான் தடுத்துவைக்கப்பட்ட இடத்தையும் மேலும் தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தையும் காட்டமுடியும்.

இதைநான் சில மனிதநேய அமைப்புக்களுக்கும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஆகியவற்றுக்கும் அறிவித்துள்ளேன் என்றும் அவர் கூறினார்.

## நீர்வேலியில் திருடர் தொல்லை

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிப்பகுதியில் இரவு நேரங்களில் திருடர்களின் தொல்லை அதிகரித்திருப்பதாகப் பொதுமக்கள் தரப்பில் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

இரவு வேளைகளில் மின் சாரத்தைத் துண்டித்துவிட்டு வீடுகளுக்குள் நுழையும் திருடர்கள் அங்கிருக்கும் பொருட்களைச் சூறையாடிச் செல்கின்றனர்.

அத்துடன் இப்பகுதித் தோட்டங்களில் உள்ள வாழைக் குலைகள் மற்றும் மரக்கறி வகைகளையும் திருடர்கள் இரவு வேளைகளில் திருடிச் செல்வதாகவும் கூறப்படுகின்றது.

## ஹெல உறுமய ஆராய்வு

(கொழும்பு)

கடந்த பொதுத்தேர்தலில் 9 ஆசனங்களைப்பெற்ற நாம், மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஆராய்ந்து வருகின்றோம். ஆனால் இதுவரை எந்த இறுதித்தீர்மானமும் எடுக்கவில்லை. என்று ஹெலஉறுமயவின் பொதுச் செயலாளர் திலக். கருணாரத்ன கூறியுள்ளார். மாகாணசபைத் தேர்தலில் நாம்போட்டியிட முடிவு செய்தால் பௌத்த பிக்குகள் அல்ல, சாதாரணமானவர்களே போட்டியிடுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக்ராட் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் ஆகக்குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ செய்திருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.
இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரல் ஒன்று வழங்கப்படவேண்டும்.

iv. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

v. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

vi. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04. பந்தி 02 இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர் கேள்வி கோரமுடியும் ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் NECORD வேலைஅடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது. 01.07.2003இற்குப் பின் பதிவுசெய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒப்பந்தக்காரர்கள் ஒத்த தன்மையிலான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உபஒப்பந்தக்காரர்களாகவோ முடித்திருந்தால் ஏதாவது ஒப்பந்தக்காரர்களுக்கு தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைஅடங்கலாக CAARP திட்டத்தில் அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ஒன்றாகும்.

05. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதி கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம் NECORD முல்லைத்தீவில் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஒப்பந்த ஆவணங்களை 2004.மே. 06 இலிருந்து 2004. மே. 18 வரை முற்பகல் 8.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலைநாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/= செலுத்திக் கொள்வனவு செய்யப்படலாம்.

07. முன்கூட்டியே ஒப்பந்தக்கூட்டமொன்று முல்லைத்தீவு கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் 2004. மே. 20 முற்பகல் 10.00மணிக்கு நடைபெறும்

08. கேள்வி கோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் பொறிவைக்கப்பட்ட இருஉறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்கவேண்டும்.

09. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப்பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்டக்கேள்விச்சபை, CAARP ,மாவட்ட கருத்திட்ட அலுவலகம்,கச்சேரி, முல்லைத்தீவிற்கு 2004. யூன் 01 முற்பகல் 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்படவேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்கமுடியும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாக மாட்டார்.

திருமதி இமெல்டா சுகுமார்,
தலைவர்,
மாவட்ட கேள்விச்சபை/அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-9461)


# சபாநாயகர் தெரிவு சந்திரிகாவுக்கு எச்சரிக்கை!

பன்னிரண்டாவது பாராளு மன்றமும் கலைக்கப்பட்டு 13 ஆவது பாராளுமன்றுக்கான பொதுத் தேர்தல் நடைபெற்று ஆளும் கட்சியும் அரசாங்கத்தை அமைத்துவிட்டது. அமைச்சர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் சம்பிராதயபூர்வ முறைப்படி தங்கள் பொறுப்புக்களைக் கையேற்றுள்ளார்கள்.

ஆளும் கட்சியாகப் பதவியேற்றுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோ இன்னும் பாராளுமன்றில் ஆட்சிக்கான அறுதிப் பெரும்பான்மையைப் பெறாத நிலையில் இதற்கான கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற தற்போதைய அவதியான நிலையில் கூட்டணி அமைத்து ஆட்சியை அமைத்த கட்சியில் ஒன்றான மக்கள் விடுதலை முன்னணியினர் தமக்கே உரிய பாணியில் குழப்பங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

அதாவது ஏற்கனவே பேரம் பேசலுடனும் பல நிபந்தனைகளுடனும் கூட்டுச் சேர முன்வந்த ஜே.வி.பி. தேர்தல் முடிந்ததும் பெரும்பாலும் தமது வேலையும், தேவையும் முடிந்துவிட்டது என்ற வெளியே சொல்ல முடியாத நிலைப்பாட்டை வெளிப்படுத்து பவையாகவே அதனுடைய செயற்பாடுகள் அமைந்துள் ளன. ஏனெனில் தேர்தல் முடிந்தவுடன் சந்திரிகா ஒரு திருப்தியான ஆட்சியை அமைக்க முடியாத நிலையில் திண்டாடிக் கொண்டிருப்பதைச் சற்றும் சிந்திக்காது அடங்காப் பையனின் குழப்படிகளைப் போன்று

முடியாது. இது ஆளும்கூட்டணி அரசாங்கத்துக்கே பெரும் நெருக்கடிகளை உருவாக்கப் போகின்றது. இந்த நிலையிலே பாராளுமன்றத்திலே பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய தேவை நிச்சயமாக அடுத்து வர இருக்கின்ற பாராளுமன்றக் கூட்டத் தொடரிலே ஏற்படும். சந்திரிகா அரசு பெரும்பான்மையை உறுதிப்படுத்தத் தவறும் பட்சத்



முடியாமல் போய்விட்டதுடன் இவர்கள் ஆட்சி யில் பங்குகொண்டு அரசை அமைக்கவும் முன்வர மாட்டார்கள். எதிர்க்கட்சியுடன் இணைந்தும் ஒரு பொதுவான முடிவுக்கு வரமாட்டார்கள். தற்போது அக்கட்சிக்குள்ளே கூட முறிவுகள் ஏற்பட்டதை சபாநாயகர் தேர்வின் போது ஹெல உறுமயவினர் சிலரின் நடவடிக்கைகள் கட்டியம் கூறுபவையாக அமைந்துவிட்டது. ஆனால் ஐ.ம.சு. முன்னணியினர் சிலர் ஹெல உறுமயவிலிருந்து சிலரைப் பிரித்தெடுத்து தமது கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது. ஆனால் ஒட்டுமொத்தமாகக் ஹெல உறுமய எனும் கட்சி சந்திரிகா அரசுக்கு எதிரணியில் இருந்துகொண்டே ஆதரவு தருவதாக ஆரம்பத்திலே சொல்லியிருந்தாலும் பின்னர் அந்த நிலையை விட்டு

வெற்றி. ஆனபடியால் அது தனது விருப்பத்தை மேலாண்மையாகக் கொண்டு முன்னணியில் அங்கம் வகிக்க முற்படும். அதற்கு இணங்க மறுக்கும் எவருடனு இறங்கிப்போவதையோ ஏற்றுக்கொண் நடப்பதையோ விரும்பமாட்டாது என்பது வெளிப்படை.

இருப்பினும் தற்போதைய நிலைமைகளைக் குழப்பிக்கொண்டு கூட்டணியிலிருந்து பிரிந்து செல்லும் அளவிற்கு தற்போது. ஜே.வி.பியினர் முன்வர மாட்டார்கள் என்றே சொல்ல முடியும். ஏனெனில் வளர்ந்து வரும் ஒரு கட்சி என்ற வகையிலும்இதனுடைய வளர்ச்சியானது மந்தகதியிலே இல்லாது ஒரு சாதாரணத் தரத்திற்கும் கூடுதலான வளர்ச்சியை அடைந்து வருவதனாலும் அது மக்கள் மத்தியிலே நன்மதிப்பையும், செல்வாக்கையும் பெற வேண்டிய தேவையிருக்கிறது. இதற்காக அது அரசிலே இணைந்து சில அமைச்சுப் பொறுப்புக்களைப்பெற்று, அதிலும் குறிப்பாக அடிமட்ட மக்களுக்கும், விவசாயிகளுக்கும் சேவை செய்யக் கூடிய அமைச்சுக்களையே பெற்றுக்கொள்ள இருக்கிறது. இதன் மூலம் தனது வளர்ச்சியை உயர்த்தி இரண்டாவது கட்சியாக உருவெடுப்பதே அதன் தற்கால நோக்கமாகும். இதனைவிடவும் ரணிலின் ஆட்சியை சற்றும் விரும்பாத ஜே.வி.பி. தம் கூட்டணியிலிருந்து பிரிந்துபோக முற்படின் அது ரணிலுக்கு சாதகமாக மாறி விடும் அவர் எஞ்சிய சுதந்திரக் கட்சியினரில் சிலரைப் பிரித்தெடுத்து ஆட்சியை அமைத்து

அதன் செயற்பாடுகள் வெளிக்கிளம்புகின்றன.

பிரதமர் நியமனம் அதற்கு வெறுப்பை ஏற்படுத்தியதும் அமைச்சுப் பதவியேற்றபின் கலந்துகொள்ளாமையும், தமக்கு வழங்கப்பட்ட அமைச்சுப் பொறுப்புக்களை உரிய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளாமல் அதனைத்தட்டிக்கழித்து வந்ததும், விவசாயத் துறை அமைச்சுக்குள்ளே, மகாவலித்திட்டம் உட்படாதமைக்காக முரண்டு பிடித்து அமைச்சுக்களைப் புறக்கணிப்புச் செய்தும், தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை புலிகளுடன் பேசித்தீர்ப்பதற்கு இம்முறை சனநாயக வழியிலே தமிழ் மக்கள் ஆணை வழங்கியிருந்தும் அதற்கு மதிப்பளிக்காமல் ஏனைய மக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சிகளுடனும் பேச வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருப் பதை யாவரும்அறிவர்.

இதனைவிட சந்திரிகா தலைமையிலான ஐ.ம.சு முன்னணி அரசு ஒரு அறுதிப் பெரும்பான்மையைக் கொண்டிருக்காத நிலையில் அவர்களுடைய ஆட்சியின் எதிர்காலம் பல கேள்விகளை மக்கள் மனதிலே எழுப்புவது மட்டுமல்லாது நம்பிக்கையீனங்களையே உருவாக்கியுள்ளது. இதற்கு மேலும் வலுச் சேர்க்குமாப் போன்று நடைபெற்ற 13 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரிலே, மக்கள் கவனத்தைச் செலுத்தியிருந்த சபாநாயகர் தெரிவும் சந்திரிகாவின் ஆளும்கட்சியின் கைகளை விட்டு நழுவிவிட்டது. இந்த சபாநாயகர் தெரிவுக்காக ஐ.ம.சு. முன்னணி சார்பாக போட்டியிட்ட டி.யு. குணசேகர அவர்கள் தெரிவிலே தோற்றுவிட ஐ.தே. கட்சியின் சார்பில் போட்டியிட்ட டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார என்பவர் ஒரு மேலதிக வாக்கு வித்தியாசத்தில் சபாநாயகராகத்தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த எதிர்க்கட்சிப் பெரும்பான்மைப் பலத்துடன் காணப்பட்ட சம்பவம் 1960 ஆம் ஆண்டு கால அரசியலிலும் இடம் பெற்றதாயினும் இம்முறை சபாநாயகர் தெரிவு மிகவும் கடும்போட்டியின் மத்தியிலே, மூன்று முறை வாக்கெடுப்பு நடத்தப்பட்டுப் பெற்றுக் கொள்ளப்பட்டமையே நோக்கவேண்டியது. அத்துடன் எதிர்க்கட்சி சார்பிலே இருந்து சபாநாயகராக ஒருவர் தெரிவு செய்யப்பட்டது, சமகால அரசியலிலே பெரும் தாக்கங்களை உண்டு பண்ணும் என்பதை எவரும்மறுக்க

தில் ஐ.தே.கட்சியினரால் அரசுக் கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டு அது நிறைவேற்றப்படுமாயின் அரசைக் கைப்பற்றிக்கொள்ள முடியும். இதற்கு ஐ.தே.முன்னணியினரும் ஏனைய கட்சிகளை அழைத்து இந்த முயற்சியை வெற்றிகரமாக செய்து முடிக்குமா? என்பதும் மறுபக்கம் உள்ள வினாவாகவே காணப்படுகின்றது. எது எவ்வாறு இருந்தாலும் சந்திரிகாவின் கைகளை விட்டு நழுவிய சபாநாயர் தெரிவு ஆட்சியின் பலமிழப்புக்கு ஒரு ஆரம்ப நடவடிக்கையாகவே அமைந்துள்ளது. நடந்து முடிந்த தேர்தலிலே எந்தவொரு பிரதான கட்சிக்கும் மக்கள் அறுதிப் பெரும்பான்மையை வழங்கவில்லை. எனினும் யாவருமே எதிர்பாராதவிதமாக உருவாக்கப்பட்ட ஜாதிகஹெல உறுமயஎனும் கட்சி பாராளுமன்றத்திலே9 ஆசனங்களைப் பெற்று ஒரு திருப்புமுனையை உருவாக்கியுள்ளது. இக்கட்சி தாம்பௌத்ததர்ம சாம்ராஜ்யத்தைப் பாதுகாப்பதற்காகவே தேர்தலில் போட்டியிடுகின்றோம் என்று கூறி அதற்காக பிக்குகளையே வேட்பாளர்களாக நிறுத்தியமையினால் அது இவ்வாறானதொரு வெற்றியைப் பெற்றது. ஒருவகையில் சொல்லப் போனால் இவர்களின் அதிரடி நடவடிக்கையினால் சிங்கள மக்களில் ஒரு பகுதியினர் குழம்பி விட்டார்களோ எனத் தோன்றுகின்றது.

இக்கட்சியின் உருவாக்கத்தினால் விகிதசாரத் தேர்தல் முறைமூலம் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மைப் பலத்தை அடைய

மாறிவிட்டார்கள் போல் உள்ளது.

இது இவ்வாறு இருக்க மிக நெருக்கமாக இருக்க வேண்டிய ஜே.வி.பியினர் இவ்வாறானதொரு போக்கைக் கடைப் பிடிப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில் அவர்கள் சனநாயக வழிக்கு வந்தது முதல் ஒன்று,பத்து, பதினாறு என்று இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தற்போது 39 ஆகீ அதிகரித்துள்ளன. இந்த நிலையிலே அதனுடைய பேரம்பேசும் சக்தியும் அதிகரிக்கப் பட்டிருக்கின்றது. ஜே.வி.பி தாம் இரண்டாவது கட்சியாக உருவெடுத்து ஆட்சியை அமைக் கும் நிலைக்கு உருவாக வேண்டும் என்பதே அவர்களின் உள் ஆசையாகும். இதற்காகவே அவர்கள் தனியே எதிர்க்கட்சியிலே இருந்து புலம்பிக்கொண்டிருந்தால் அது தமது வாக்கு வங்கிக்கு ஆபத்தாகலாம்.

**ஆ.சி.ஸ்ரீபன்**

அல்லது தாம் ஒரு துரித வளர்ச்சியை விரைவிலே பெற்றுக்கொள்ள முடியாது போகலாம் என்பதை உணர்ந்த நிலையிலே தான் ஒரு ஆட்சியமைக்கும் பெரும்பான்மைக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தது. ஆனாலும் தனியே இதுதான் காரணம் என்றும் கூறமுடியாது. அதாவது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை வீழ்த்த வேண்டும் என்ற நோக்கமும் இக்கூட்டு ஏற்படக் காரணமாகின. எதுவாக இருந்தாலும் ஜே.வியைப் பொறுத்தாவரை அதற்கு வெற்றியேதான். ஏனெனில் இதற்கு முன்னர் நடந்த 2001ஆம் ஆண்டுத் தேர்தலில் 16 ஆசனங்களைக் கொண்டிருந்த கட்சியானது 2004 ஆம்ஆண்டு இம்முறை தேர்தலிலே அது இரு மடங்கையும் தாண்டி 39 ஆசனங்களைப்பெற்றது. மகத்தான

விடுவாரென்ற அச்சமும் காணப்ப டுகிறது. இருப்பினும் இந்தநிலையிலும் ஜே.விபி. எவ்வளவு காலம் இருக்கும் . நடக்கவிருக்கின்ற மாகாணசபைத் தேர்தல்களிலும் தமக்கு சாதகமான வாய்ப்பு இருப்பதை விட மேல் மாகாண சபைத்தேர்தல்கள் மூலம் உணர்ந்து கொண்ட ஜே.விபி இந்த நிலைமை தாண்டிய பின்னர் என்ன செய்யப்போகின்றது என்பது வெறும் ஆரூடமாகவே இருக்கும். இருந்தாலும் சந்திரிகாவை சிக்கலில் மாட்டி வைத்திருக்கும் ஜே.வி.பியினர் ஒரு பொதுவான நிலைப்பாட்டுக்கு வராத பட்சத்தில் இவ்வரசின் எதிர்காலம் மிகவும் சொற்பமனதாகவே இருக்கப்போகிறது. இது இவ்வாறு இருக்க தமிழர் தரப்பினர் நிலைமையைப் பொறுத் தவரையில் அவர்கள் இம்முறை தேர்தலின் மூலம் ஒரு உறுதியான பலத்தை ஒன்று திரட்டி ஒரே தேசியத்தின் கீழ் ஒரு வலுவான சக்தியாக நின்றுகொண்டு நடைபெற்று வரும்அரசியல் நெருக்கடிகளை அவதானித்து வருகின்றனர். இதேவேளை இனி வரும்,எந்தத் தேர்தலும் இதேபோன்ற சிக்கல்களை ஏற்படுத்தும் என்பதில் வியப்பில்லை. இவற்றைக் கடந்து செல்ல அல்லது நிவர்த்தி செய்ய இருவழிமுறைகள் உண்டு.ஒன்று அரசியல் யாப்பை மாற்றி பாராளுமன்றத் தேர்தல் முறைகளில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டியது. அது தற்போதைக்கு சாத்தியப்படக் கூடிய விடயமல்ல. அடுத்தது தேசிய அரசு ஒன்றை அமைப்பது இதற்கு பிரதான கட்சிகளும். பேரினவாதக் கட்சிகளும் ஒத்துவரும் என்பதும் விடைகாணமுடியாத கேள்வி. ஆகவே இந்த வழிமுறையும் தற்போது நடைபெறக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படவில்லை. ஒட்டுமொத்தத்தில் கூறப்போனால் 13ஆவது பாராளுமன்றமும் பாதியிலே கவிழ்ந்து விடும் என்ப தற்கான வாய்ப்பே அதிகம்.

## நியூட்டன் முன்பள்ளிக்கு அடிப்படை வசதிகள் தேவை!

(அலுவலக செய்தியாளர்)

திருமுருகண்டியில் இயங்கிவரும் நியூட்டன் முன்பள்ளி எதுவித அடிப்படை வசதிகளுமின்றி இயங்கி வருகின்றது.

மேற்படி முன்பள்ளியானது மிக நீண்ட காலமாக எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி இயங்கிவருகின்றது இம்முன்பள்ளியில் 30இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்றலினை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் இதுவரை காலமும் இந்த சிறார்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படவில்லை மிக வறுமையான மாணவர்களே இங்கு கல்வி கற்கின்றனர். ஆனால் இவர்களுக்கு போசாக்கு உணவுகளை வழங்கக் கூட முடியாதுள்ளதோடு, குடிநீர் வழங்குவதற்கான வசதிகளும் இல்லை எனவும் அவ் முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்தனர். (ச.த.)

## வீட்டுத் தோட்ட உபகரணங்கள் 50 பயனாளிகளுக்கு வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

மாங்குளம் அபிவிருத்தி நிறுவனத்தால் 50 பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.இது பற்றி மாங் குளம் அபிவிருத்தி நிறுவனத்தின் இணைப்பா ளர் சு.திருச்செல்வம் தகவல் தருகையில் கடந்த 20ஆம் திகதி இந்து புரம், திரு முருகண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஐம்பது குடும்பங்களுக்கு வீட்டுத் தோட்டம் செய்வதற் கான உபகரணங்கள் நன்கொடையாக வழங் கப்பட்டதெனவும் விவசாயம் செய்யக் கூடிய குடும்பங்களுக்கு நீர்ப்பாசன வசதியுடன் (கிணறு) இவ்வுபகரணங்களும் வழங்கப் பட்டதெனவும் இதற்கு எக்கோ மற்றும் கெயார் நிறுவனங்கள் உதவிகளை மேற்கொண்ட தெனவும் தெரிவித்தார்.

# மாளிகாவத்தையில் துப்பாக்கிச் சூடு தமிழ் இளைஞர் பலி மற்றொருவர் காயம்

(கொழும்பு)

கொழும்பு மாளிகாவத்தையில் நேற்று முன்தினம் இரவு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது.

இதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த நபர் ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த (25வயது) இளைஞர் இவர் கொழும்பு தேசிய வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக மாளிகாவத்தைப் பொலிசார் கூறியுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் உயிரிந்தவர் வாழைச்சேனையைச் சேர்ந்த சின்னத்தம்பி. ரமேஸ் என்றும் பொலிசார் அடையாளம் கண்டுள்ளனர்.

சம்பவ இடத்தில் கைக் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான விரிவான விசாரணை ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக கொழும்பு பிரதி பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் அறிவித்துள்ளார்.

உயிரிழந்த நபரும் காயமடைந்த நபரும் நேற்று முன்தினம் இரவு மாளிகாவத்தை தற்காலிக தங்குமிடத்திற்குச் சென்ற போதே எட்டு மணியளவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

# இத்தாலி செல்ல முயன்று கைதான இலங்கையர்கள் பிணை கோரல்

(கொழும்பு)

இத்தாலிக்குச் சட்டவிரோதமாக செல்ல முயன்று பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட 50 இலங்கையர்களும் தங்களைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

இவர்கள் தமது மனு வில் சட்டமா அதிபரையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரையும் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 24ம் திகதியிலிருந்து தங்களை விளக்கமறியலில் வைத்திருப்பது சட்டவிரோதமானது என்று அவர்கள் மனுவில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பிணையில் நாங்கள் செல்வதற்கு நீர் கொழும்பு நீதிவான் அனுமதி வழங்கும் வகையிலே உத்தரவு வழங்குமாறு அவர்கள் தங்கள் மனுவில் கேட்டுள்ளார்கள்.

# தொழிலாளர் தின எழுச்சிப் பேரணி கிளிநொச்சியில் இடம் பெற ஏற்பாடு

மே தினம் தொடர்பான முன் ஏற்பாட்டுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி வலயக்கல்விப்பணிமனையின் கேட்போர் கூடத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தி.முரளி தலைமையில் நடைபெற்றது.

இதில்அனைத்து பிரதேசங்களையும் ஒன்றிணைத்து மாவட்ட மட்டத்தில் மே தினப்பேரணியை நடாத்துவதாக தீர்மானிக்கப்பட்டது. முன்னதாக கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இருந்து ஆரம்பமாகும் பேரணி கிளி.பொது விளையாட்டரங்கை வந்தடையும். பின். தேசியக் கொடி ஏற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும். சிறப்பு ஊர்திகளுக்கான வெற்றிக் கேடயங்களும், சிறப்பு பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

மேற்படி முன்னேற்பாட்டுக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகம், கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கியூடெக் நிறுவன இணைப்பாளர் ஆகியோர் கருத்துகளை வழங்கினர்.


## பணிநிலைவெற்றிடம்

*வன்னிப் பகுதியில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றிற்கு கீழ்க்காணும் பணிநிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

**கணக்காளர்**

(பல்கலைக்கழகம் ஒன்றில் வணிகத்துறையில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது க.பொ.த(உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் சித்தியுடன் 5 வருட அனுபவம்)

**கணக்குப் பதிவாளர்**

(க.பொ. உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்)

**வெளிக்கள அலுவலர்**

க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியுடன் தொழில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் வரும் 10.05.2004 திங்கட் கிழமைக்கிடையில் எமக்குக் கிடைக்கக் கூடியதாக விளம்பர இலக்கம் -9 ஈழநாதம் விளம்பரப்பணி மனை யாழ்.சாலை கிளிநொச்சி. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

குறிப்பு:-
உங்கள் தொடர்புகளுக்கான முகவரியை தெளிவாகக் குறிப்பிடவும்.

(3991)


## மாவட்ட நிர்வாக கட்டமைப்பு தெரிவு

வவுனியா மாவட்டத்திற்கான முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் மாவட்ட நிர்வாகக் கட்டமைப்பு தெரிவு நாளை வியாழக்கிழமை வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணி மனையில் இடம் பெறவுள்ளது இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வவுனியா மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார்.

## கேள்வி அறிவித்தல்

1) முல்லைத்தீவு மாவட்ட கச்சேரிக் கட்டடம் புனரமைப்பதற்கான கேள்விப் பத்திரம் உள்ளூர் கட்டட ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்படுகின்றது. கேள்வி கோரும் ஒப்பந்த காரர் இக்ராட் (ICTAD) தரம் எம் 7இல் பதிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும் கேள்வி கோருவோர் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா: 750/= உம், மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா: 22,000/= உம் செலுத்தி கேள்விப் பத்திரங்களை முல்லைத்தீவுக் கச்சேரியிலுள்ள புனர்வாழ்வுக் கிளையில் 03.05.2004.ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன் பெற்றுக் கொள்ளலாம்.

2) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை 17.05.2004. ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அதற்கென வைக்கப்பட்டுள்ள கோள்விப் பெட்டியில் நேரடியாகவோ இடலாம் கேள்விப்பத்திர வலது பக்க மேல் மூலையில் கேள்விக்கான வேலையின் விபரம் குறிப்பிடப்படல் வேண்டும்.

3) கேள்விகள் 17.05.2004. ஆம் திகதி அன்றைய தினமே பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். திறக்கப்படும் நேரத்தில் கேள்வி கோரியோரோ அல்லது கேள்வி கோரியவரின் எழுத்து மூலமான பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

(இமெல்டா சுகுமார்)
மாவட்ட கேள்விச் சபை தலைவர்,
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு.

(சி.7194)


## பணிநிலைவெற்றிடம்

***புதிதாக ஆரம்பிக்கப்பட்ட. கேம்பிறிஜ் கல்லூரிக்கு எழுது வினைஞர் தேவை(பெண்)***

***AL சித்தியெய்தியோர் விரும்பத்தக்கது.***

***மேற்படி தகுதி உடையோர் 30.04.2004 வெள்ளி (மாலை 4.00 மணிக்கு) கல்லூரிக்கு சமுகம் அளிக்கவும்.***

**தொடர்பு**

கேம்பிறிஜ் கல்லூரி,
இல.01,
பஸ் நிலைய வீதி,
உதயநகர் மேற்கு
கிளிநொச்சி.

(சி.9384)


(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

06. கேள்வி ஆவணங்களை 2004 ஏப்ரல் மாதம் 28ஆந் திகதியிலிருந்து மேமாதம் 18ஆந் திகதி வரை காலை 9.30இலிருந்து பிற்பகல் 3.00மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000/= த்தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்தி கொள்வனவு செய்துகொள்ளலாம்.

07. கேள்வி கோருவதற்கான பணிப்புரையின் பிரிவு 1 வாசகம் 11 குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இது தொடர்பாக பந்தி 08 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம் ,திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

08. அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, நிகொட் கருத்திட்டம், கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு 2004 மே மாதம் 21 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09. கேள்வி சம்பந்தப்பட்ட கூட்டமொன்று மே மாதம் 11 ஆம் திகதி அன்று முற்பகல் 10.30 மணிக்கு கச்சேரியில் நடைபெறும் .

10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாக விளங்க மாட்டார்.

தி. இராசநாயகம்,
தலைவர், மாவட்ட கேள்விச்சபை,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-9458)



**சிந்தனைக்கு**

நான் எப்போதும் பேச்சுக்குத் தருவது குறைந்தளவு முக்கியத்துவமே; செயலால் வளர்ந்த பின்புதான் நாம் பேசத் தொடங்க வேண்டும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 28-04-2004

## அரசின் உதவியின்றிச் சாத்தியமில்லை!

மட்டு.ஆயித்தியமலைப்பகுதியில் தேசத்துரோகிகளான கருணா குழுவினர் மேற்கொண்ட தாக்குதலில் ஏழு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளனர். இத்தாக்குதலானது தேசத்துரோகிகளான கருணா குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட தாயினும் இது சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பின் ஒத்தாசை இன்றி நடத்தப்பட்டிருக்க முடியாது.

அதாவது இத்தாக்குதலின் பின்னணியில் படைத்தரப்பே முழு அளவில் இருந்திருத்தல் வேண்டும்/முடியும். இந்தவகையில் இது ஒருயுத்தநிறுத்த மீறல் என்பது மட்டுமல்ல, சமாதானத்திற்கு விரோதமான நடவடிக்கையும் ஆகும்.

சிறிலங்கா படைத்தரப்பு இவ்விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ளது என்பதை வவுணதீவு இராணுவமுகாம் ஊடாகவந்து தாக்குதலை நடத்தியமை மட்டுமல்ல அதனூடாகவே திரும்பிச்சென்றுள்ளமையுமே நிருபணம் செய்யப் போதுமானதாகும். இதற்கு வேறு நியாயங்கள் தேடுபவர்கள் அடிமுட்டாள்களாகத்தான் இருக்கமுடியும்.

துரோகி கருணா குழுவினர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் இருந்தே இத்தாக்குதலை நடத்தியதாக யாராவது விளக்கமளிக்க முன்வருவார்களேயானால் அவர்கள் யதார்த்தத்திற்கு மாறாக விதண்டாவாதம் செய்பவர்களாகவே இருக்கமுடியும். ஏனெனில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஒரு வாகனத்துடன் ஒளித்திருத்தல் என்பது சாத்தியப்பாடானதொன்றல்ல என்பது மட்டுமல்ல, துரோகி கருணாகுழுவிற்கு அத்தகைய நெஞ்சழுத்தம் இருப்பதற்கான வாய்ப்பே இல்லை. அவ்வாறு இருக்குமானால் அவர்கள் மட்டக்களப்பை விட்டு புலிகள் நகர்வை ஆரம்பித்து 72மணி நேரத்திற்குள் தப்பி ஓடியிருக்கமாட்டார்கள்.

ஆகையினால் துரோகி கருணா குழு நடத்திய தாக்குதலுக்கு இராணுவத்தினரின் பரிபூரண ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றது என்பது சந்தேகத்திற்கிடமற்றதொன்று. சில வேளைகளில் கருணாகுழுவின் இத்தாக்குதலில் ஒருசில ஆயுதப்படைத்தரப்பு பங்குபற்றியிருப்பினும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

சிறிலங்கா ஆட்சியாளர்களும் சரி, ஆயுதப்படைத்தரப்பும் சரி கருணாவை தமிழ் இனவிரோதச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துதல் என்ற ரீதியில் மாறுபாடான கருத்துக்கள் இருக்க வாய்ப்பில்லை. தற்பொழுது விரைவில் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பும் அரசாங்கமும் கருணாவைப் பயன்படுத்தத் தவறிவிட்டது என்பதே சிங்கள அரசியல் வாதிகள், பேரினவாதிகள் தரப்பில் உள்ள முக்கிய ஆதங்கமாகும்.

இந்நிலையில் கருணாவிற்கு சிறிலங்கா அரசு அடைக்கலம் அளித்துவைத்திருப்பதும், இனவிரோத நடவடிக்கைகளுக்கு கருணா குழுவைப்பயன்படுத்த முற்படுவதும் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்குரிய விடயமல்ல. அவ்வாறு எதுவும் நடைபெறாது இருப்பின்தான் அது ஆச்சரியத்திற்குரியதொரு விடயமாகவும், புதியதொரு விடயமாகவும் இருந்திருக்கும்.

ஆனால் கருணாவைத் தமிழ் இனவிரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதினால் இனப்பிரச்சினை விவகாரத்தில் எந்தவித மாற்றத்தையும் சிறிலங்கா அரசினால் ஏற்படுத்திவிட முடியாது. எத்தனையோ இனவிரோதிகளையும், சமூகத்துரோகிகளையும் சிறிலங்கா அரசு தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்திற்குஎதிராகப் பயன்படுத்தியே வந்துள்ளது. இவர்கள் காட்டிக்கொடுப்பில் உச்சக்கட்டம் வரையில் செயற்பட்டதும் உண்டு.

ஆகையினால் கருணாவைச் சேர்த்துக்கொள்வதில தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைச் சிதைத்து விடலாமென யாராவது எண்ணுவார்களேயானால் அதில் அவர்களுக்கு ஏமாற்றமே கிடைக்கும். கருணா போன்றவர்கள் நீண்டகாலம் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்ததினால் சில தகவல்களை அவர்களால் வழங்கமுடியும். ஆனால் காலப்போக்கில் அவை பயனுள்ளவையாக இருக்கமாட்டாது. கருணாவின் இனவிரோதக்குழுவால் தமிழ்த் தேசிய உணர்வுகொண்ட சிலரைப் படுகொலை செய்ய மட்டுமே முடியும். அதற்கு அப்பால் எதுவும் சாத்தியமாகமாட்டாது.

இதனால் கருணாவிற்குச் சிறிலங்கா அரசாங்கம் அடைக்கலம் கொடுப்பதோ அவர்களை தமிழ் இனவிரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதோ தமிழ் தேசியத்தை சிதைத்துவிடப் போவதில்லை. ஆனால் இது இலங்கையில் யுத்தநிறுத்தத்தையும், சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் சிதைப்பதற்கான வாய்ப்புண்டு. ஏனெனில் தமிழ் மக்கள் கருணாவின் துரோகத்தனத்தை வெறுமனே பார்த்துக்கொண்டு எவ்வளவு காலத்திற்கு இருக்கமுடியும்?

சனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து அறிவிப்புக்களைச் செய்துவரினும் அவரது நடவடிக்கைகள் இனப்பிரச்சினைகளுக்கு அரசியல்தீர்வு நோக்கிச்செல்வதாகத் தெரியவில்லை. பலவீனமான நிலையில் அவரது அரசாங்கம் இருப்பதன் காரணமாகவே சனாதிபதி சந்திரிகா சமாதானம் பற்றிப் பேசுகின்றாரேயொழிய உளப்பூர்வமாக அவர் அம்முயற்சியில் ஈடுபாடுகாட்டவில்லை என்பதே பொதுவான அபிப்பிராயமாகும். இதனை உறுதிப்படுத்துவதாகவே மட்டு-ஆயித்தியமலைச் சம்பவமும் உள்ளது.

# பாராளுமன்றில் பெரும்பான்மை பலமுள்ளதை ஐ.ம.சு.முன்னணி அரசு நிரூபிக்க வேண்டும்

### -ஹெல உறுமய வலியுறுத்து

(கொழும்பு)

ஜே.வி.பி.யினர் தமது எதிரணியினரை மூன்று வழிகளில் தாக்குகின்றனர். ஒன்று கூடாத சொற்பிரயோகங்களால், இரண்டாவது கைகால்களைத் தாக்கி முறித்துவிடுவது, மூன்றாவது உயிர்க்கொலை இவ்வாறு ஜாதிகஹெல உறுமயக் கட்சியின் எம்.பியான உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பொன்றின்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவித்தபோது மேற்கூறப்பட்ட மூன்று வழிகளில் இரண்டை ஜே.வி.பி.யினர் பிக்குகள் மீது பிரயோகித்திருக்கின்றார்கள். கடைசியாக உயிர்க்கொலை ஒன்றே மிஞ்சியிருக்கின்றது. அவர்கள் தொலைபேசி மூலம் அச்சுறுத்தி வந்திருக்கின்றார்கள். சென்ற 18ஆம் திகதிக்கு முன்பு என்னை கொல்லப்போவதாக அச்சுறுத்தியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

நாம் ஐ.ம.சு.முன்னணி அரசுக்கு ஆதரவளிப்பதாகவே கூறியுள்ளோம். எமது நிலைப்பாட்டை சந்திரிகாவுக்கும், பிரதமர் ராஜபக்சவுக்கும் கூறினோம எனினும் எமது இரு உறுப்பினர்களை அவர்கள் கடத்தினர். அதனை மீளப்பெறும் முயற்சியாகவே நாம் சபாநாயகர் தெரிவின் போது வாக்களித்தோம். அதற்கு ஆத்திரமடைந்த ஜே.வி.பி.யினர் புத்தகங்களையும் கதிதக்கோவைகளையும் எம்மீது வீசியது இவ்வாறான அனுபவம் ஒன்றை வாழ்க்கையில் சந்திக்கவில்லை, என்று கூறிய அவர் கடந்த 25ஆம் திகதியும் எமது தரப்பினர் மீது தாக்குதல் ஒன்று நடைபெற்றுள்ளது. தற்போதைய அரசின் கட்டுப்பாட்டில் பொலிஸ் திணைக்களம் இருப்பதாயின் இவற்றுக்கு நடவடிக்கை எடுக்காதது ஏன் எனக் கேள்வி யெழுப்பினர். அர்ஜுன ரணதுங் கவின் அமைச்சுப்பதவி தொடர்பாகவும், சபாநாயகர் தெரிவு தொடர்பாகவும் எம்மைச் சம்பந்தப்படுத்தினர். ஆயினும் மகாவலி அமைச்சுக்கு எம்மை சம்மந்தப்படுத்தவில்லை.

106 ஆசனங்களைப் பெற்றுள்ள ஐ.ம.சு.கூட்டணி 113 ஆசனங்களைப் பெற்று பெரும்பான்மையை நிருபிக்கப்போவதாக விமல்வீரவன்ச கூறுவதை எமக்கு தெளிவாக்க வேண்டும் இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ல.தீ)

# ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சில மாதங்களில் அமைவது உறுதி

### -முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன

(கொழும்பு)

இன்னும் சில மாதங்களில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஒன்று இந்நாட்டில் அமைவது உறுதியாகிவிட்டது. சுதந்திர முன்னணியின் முதலாவது நகர்வை தோற்கடித்துவிட்டோம். எங்களுக்கு இனி வெற்றிதான்.

இவ்வாறு முன்னாள் காணி அமைச்சர் ராஜிதசேனாரட்ன தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை என்பதை கடந்த வியாழக்கிழமை நிருபித்துவிட்டோம்.

பெரும்பான்மைப் பலமின்றி அரசாங்கத்தால் எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்க முடியாது.

குறிப்பாக கொள்கைகளில் முரண்பட்டு நிற்கும் கூட்டமைப்பு அரசாங்கத்தால் சமாதான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது.

இதன்மூலம் வெளிநாட்டு உதவிகள் தடைப்பட்டுப் போகும். உதவிகள் கிடைக்காது விட்டால் அள்ளி வீசிய வாக்குறுதிகளை எவ்வாறு நிறைவேற்றுவது? கூட்டமைப்புக்குள் முறுகல் முழுந்துவிடும் என்று கூறமுடியாது.எனவே விரைவில் ஐக்கிய தேசிய முன்னணியின் அரசாங்கம் இந்த நாட்டில் அமைக்கப்படுவது உறுதியாகும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# மே தினக் கூட்டத்தை தனியாக நடாத்த ஜே.வி.பி.யினர் தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் இணைந்து மேதினக் கூட்டத்தை கொழும்பு நகரசபை மைதானத்தில் நடாத்தவிருக்கின்றனர். எனினும் ஜே.வி.பி. யினர் மட்டும் தமது மேதினக் கூட்டத்தை வேறொரு இடத்தில் நடாத்துவதற்கு முடிவு செய்துள்ளனர்.

அதன் மேதின ஊர்வலம் கொழும்பு B.R.C. மைதானத்தில் ஆரம்பித்து நகர மண்டப மைதானத்தை வந்தடையும் ஊர்வலத்தில் என்றும் இல்லாதவாறு வாகன அணிவகுப்பை கோஷங்களுடன் ஈடுபடுத்தி உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க ஜே.வி.பி.திட்டமிட்டுள்ளது.

# பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக ரட்ணசிறி விக்கிரமநாயக்க!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேசியப்பட்டியல் மூலம் இணைத்துக்கொள்ளப்பட்ட ரட்ணசிறிவிக்ரமநாயக்கவுக்கு புத்தசாசன அமைச்சுப்பதவியும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சுப்பொறுப்பும் வழங்கப்படலாம் என சனாதிபதி செயலகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த வாரம் முடிவுக்குள் அவர் சனாபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொள்வார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# 4வது போட்டியிலும் இந்தியாவுக்கு வெற்றி

சிறிலங்கா-இந்திய மகளிர் அணிகள் பங்குபற்றும் ஆசியக் கிண்ணத்துக்கான போட்டித் தொடரின் நான்காவதுபோட்டியிலும் இந்தியா 10 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா 28.2ஓவரில் 66 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது ஒரு சமயம் விக்கெட் இழப்பின்றி 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தாலும் இந்திய வீராங்கனைகளின் பந்துவீச்சில் அது விரைவில் ஆட்டமிழந்தது. இந்திய அணியின் மந்தாமாபன் 10 ஓட்டங்களைக் கொடுத்து 6விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

பதிலுக்கு 67 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நோக்கி ஆடிய இந்திய மகளிர் அணி விக்கெட் இழப்பின்றி 69 ஓட்டங்களைப் பெற்றது.

இத்தொடரில் சிறிலங்கா அணியின் ஆட்டம் தொடர்பாக மகளிர் கிரிக்கெட் சபைத்தலைவி தமது ஏமாற்றத்தைத் தெரிவித்துள்ளார்.

# காற்பந்தாட்டத்தில் சிறிலங்கா முன்னேற்றம்

2006 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண காற்பந்துப் போட்டிக்கான தகுதிகாண் போட்டிகள் தற்போது கண்டங்க்ள் ரீதியாக நடைபெற்று வருகின்றன.

இதன் அடிப்படையில் சர்வதேச காற்பந்து சம்மேளனத்தின் தரப்படுத்தலில் சிறிலங்கா காற்பந்து அணி சற்று முன்னேற்றம் அடைந்துள்ளது. அது தரப்படுத்தலில் 135 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

தொடர்ந்தும் முதல் இடத்தைப் பிரேசிலும், இரண்டாம் இடத்தைப் பிரான்ஸ் அணியும், மூன்றாம் இடத்தை ஸ்பெயின் அணியும், நான்காம் இடத்தை மெக்சிக்கோ அணியும், ஐந்தாம் இடத்தை நெதர்லாந்து அணியும், ஆறாம் இடத்தை ஆஜென்டீனா அணியும் பெற்றுள்ளன. இதே நேரத்தில் சிறிலங்கா காற்பந்து அணி 135 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

இது தரப்படுத்தல் வரிசையில் இந்திய அணியை விட முன்னணி பெற்றுள்ளது. இந்திய அணி 139ஆவது இடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை 2006 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடை பெறவுள்ள உலகக் கிண்ண இறுதிச் சுற்றில் 35 நாடுகளே கலந்து கொள்ளும என்பது குறிப்பிடத்தக்கது.



# நிமலராஜன் கொலை தொடர்பாக சட்டமா அதிபரிடம் அறிக்கை

## -புலனாய்வு அதிகாரி கையளித்ததாக அறிவிப்பு

(வடமராட்சி கிழக்கு)

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையினை, அது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டிருந்த விசேட குற்றப் புலனாய்வுப்பிரிவு பொறுப்பதிகாரி ரஞ்சித் டி.சில்வா சட்டமா அதிபரிடம் கையளித்துள்ளார்.

நேற்றைய தினம் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதவான் இ.த.விக்கினராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அவ் விசாரணையின் போது ஆஜரான குற்றப்புலனாய்வுப்பிரிவு பொறுப்பதிகாரி ரஞ்சித் டி.சில்வாவே மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

இதேவேளை நிமலராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினர்களான ஜெகன் எனப்படும் கந்தசாமி ஜெகதீஸ்வரன் என்பவர் உள்ளிட்ட இருவரையும் தொடர்ந்தும் யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைத்திருக்க நீதவான் பொலிசாருக்கு உத்தரவிட்டார். அத்துடன் விசாரணைகளை எதிர்வரும் ஜூன் 8ஆம் திகதிக்கு அவர் ஒத்திவைத்துள்ளார். ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலைச் சம்பவ விசாரணைகள் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (27)

# தொழிலாளர் தினத்தை அனுஷ்டிக்க யாழ்.தொழிலாளர் சம்மேளனம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் தினமான மே-1 ஆம் திகதியை தமிழினத்தின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாக அனுஷ்டிப்பதற்கு யாழ். மாவட்ட கூட்டுதொழிற் சங்கங்களின் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ளது.

தமிழ் மக்கள் மீது பேரினவாத ஆக்கிரமிப்பாளர்களால் திணிக்கப்பட்டு வரும் அராஜங்களுக்கெதிராக குரல் கொடுக்கும் நாளாக அனுஷ்டிக்கப்படவுள்ள இந்நாளில் தமிழினம் சார்பாக குரல் கொடுக்க அணிதிரளுமாறு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்களுக்கும் யாழ்.மாவட்ட கூட்டுத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது. இதேவேளை மேதின அனுஷ்டிப்பிற்குரிய ஏற்பாடுகள் குறித்த முக்கிய கூட்டம் ஒன்று இன்று மாலை யாழ்.. பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (33)

# அமைச்சு செயலாளர் நியமனத்தில் இனவிகிதாசாரம் இல்லை

## தமிழரசுக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அமைச்சுக்களின் செயலர்கள் விடயத்தில் இனவிரோதமான முறை கடைப்பிடிக்கப்படவில்லை என தமிழரசுக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் இது தொடர்பில் கூறுகையில் அண்மையில் நியமனம் பெற்ற 35 அமைச்சர்களின் செயலாளர்களில் இருவர் மாத்திரமே சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர் கடந்த அரசாங்க ஆட்சிக்காலத்தில் சிறுபாண்மை சமூகத்தைச் சேர்ந்த 7 பேர் அமைச்சு செயலர்களாக பதவி வகித்தமையையும் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார். (32)

## மாற்றம்

ஆளும் கட்சியின் பிரதம கொறடா பதவியிலிருந்து ஜெயராஜ் பர்னாண்டோ புள்ளேயை நீக்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முடிவு செய்துள்ளதாக தெரியவருகிறது. இவருக்குப் பதிலாக அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பழைய உலோகப்பொருள் விற்பனை செய்யும் தமிழர்கள் மீது சிங்களவர்கள் மிரட்டல்

(கொழும்பு)

கொழும்பில் பழைய உலோகப் பொருட்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள தமிழர்கள் கிரியத் கொடயைச் சேர்ந்த சிங்கள பித்தளைப் பொருட்கள் உற்பத்தியாளர்களால் அச்சுறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. செம்பு உட்பட பழைய உலோப்பொருட்களுக்கு உலகச்சந்தையில் சிறந்த கேள்வி காணப்படுகிறது. இதன் காரணமாக உலோகப் பொருட்கள்விற்பனையில் ஈடுப்பட்டுள்ள தமிழ் வர்த்தகர்கள் ஏற்றுமதியாளர்களுக்கு தமது பொருட்களை விற்பனை செய்து வருகின்றன. இந்த நிலையில் அதிக விலையைக் கருத்தில் கொண்டு தமிழ் வர்த்தகர்கள் செம்பை ஏற்றுமதி செய்வதன் காரணமாக தமது பித்தளைப் பொருட்களுக்கான உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளதாக கூறும் களனி, கிரிபெத்கெய, மாவிர. மற்றும் தலுப்பிட்டிய பிரதேசங்களைச் சேர்ந்த சிங்களப் பித்தளை பொருள் உற்பத்தியாளர்கள் தமிழ் வர்த்தகர்கள் செம்பை ஏற்றுமதி செய்யாமல் தமக்கு விநியோகம் செய்யவேண்டும் என வலியுறுத்தி வந்தனர்.

இதன் உச்ச கட்டமாக நேற்று முன்தினம் அவர்கள் 25ற்கும் மேற்பட்ட வாகனங்களில் புறக்கோட்டை, பஞ்சிகாவத்தை மற்றும் கிராண்ட்பாஸ் ஆகிய பகுதிகளுக்குச் சென்று தமிழ் உலோகப் பொருள் வர்த்தகர்களை அச்சுறுத்தியுள்ளனர். இன்னும் மூன்று நாட்களுள் செம்புப் பொருட்களை தமக்கு விற்பனை செய்யாவிட்டால் விபரீதங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனவும் எச்சரிக்கை விடுத்துச் சென்றுள்ளதாக உலோகப் பொருள் விற்பனைகளில் ஈடுபட்டுள்ள தமிழ் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் தாம் மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் மூலமாக பொலிசாரிடம் முறையிடப் போவதாகவும் தெரிவித்துள்ளனர். (32)

# பாராளுமன்றத்துக்கு வெளியே அரசியலமைப்பைத் திருத்த நடவடிக்கை

## சந்திரிகாவின் முயற்சிக்கு ஐ.தே.க. ஆட்சேபம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்துக்கு வெளியே அரசியலமைப்பை மீளத்திருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதை ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சேபித்துள்ளது. இவ்வாறான நடவடிக்கை மூலம் அரசியலமைப்பை சாதாரண நாடாளுமன்ற சட்டமூலத்துக்கு சமனான நிலைக்குக்கொண்டு வர சனாதிபதி முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். 1972ஆம் ஆண்டில் இலங்கையின் காலனித்துவ ஆட்சியில் இருந்து குடியரசாக மாற்றுவதற்கு அரசியலமைப்பு சிறிமாவோ பண்டாரநாயக்கா வினால் மாற்றியமைக்கப்பட்டது அதுபோன்றே சனாதிபதியும் முயற்சி ஒன்றை மேற்கொள்கிறார். எனினும் இது அவர் 2005ஆம் ஆண்டில் முடிவுறும் தமது ஆட்சியை நீடிப்பதற்கான ஒரு நடவடிக்கையாகவே அரசியலமைப்பு சீர்திருத்தத்தை மேற்கொள்வதற்காக ஜீ.எல்.பீரிஸ் குற்றம் சுமத்தியுள்ளார். அரசியலமைப்பு மாற்றம் பெற வேண்டும் என்பதில் ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாகவே உள்ளது. எனினும் அது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்று பின்னர் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (32)

## -போராட்டத்தில் இணைந்த- 18 வயதுக்கு உட்பட்ட 3 சிறுவர்கள் புலிகளால் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(வவுனியா)

விடுதலைப்புலிகள் இயக்கத் தில் இணைந்துகொண்ட 18 வயதிற்கு உட்பட்ட 03 சிறுவர்கள் நேற்று வவுனியாவில் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா அரசியல் துறை செயலகத்தில் இந்நிகழ்வு இடம் பெற்றது. இதற்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் தலைமை தாங்கினார். செஞ் சிலுவைச்சங்கப்பிரதிநிதிகள் முன்நிலையில் இச்சிறுவர்கள் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜே.வி.பி. அமைச்சர்கள் இன்று பதவியேற்க இணக்கம்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் 4அமைச்சர்களும்,4 பிரதி அமைச்சர்களும் இன்று பதவிப்பிரமாணம் மேற்கொள்ள விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் இந்தமுன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மகாவலி தொடர்பில் இருதரப்புக்கும் இடையில் எழுந்திருந்த முறுகல் சம்பந்தமாக சனாதிபதி நேற்றுமுன்தினம் இடம் பெற்ற சந்திப்பில் இரண்டு யோசனைகளை முன்வைத்தார். நீர்வடிகால் அமைச்சை சிறிலங்கா சுதந்திரக் கட்சி தம்வசம் வைத்துக்கொள்ளும் அதேநேரம் மகாவலி அமைச்சை மக்கள் விடுதலை முன்னணிக்கு வழங்குவது இதில் ஒரு யோசனையாகும். மகாவலி அமைச்சை சிறிலங்கா சுதந்திரக்கட்சி கொண்டிருக்கும் நிலையில் அதன்கீழ் வரும் பிரதேசங்களில் விவசாய அமைச்சின் கீழான முழுமையான அதிகாரம் கொண்ட மகாவலி அபிவிருத்திச் சபையை அமைப்பது சனாதிபதியின் இரண்டாவது யோசனையாகும். சனாதிபதியின் இரண்டாவது யோசனை தொடர்பில் சுமார் 4 மணித்தியாலங்களாக கலந்தாலோசனை நடத்திய மக்கள் விடுதலைமுன்னணியினர் அதனை ஏற்றக்கொள்வது என தீர்மானித்தனர். இதன் அடிப்படையில் விவசாய அமைச்சு உட்பட 4 அமைச்சுக்களை இன்று ஏற்றுக் கொள்வது எனவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சரவைக் கூட்டத்தில் தாங்கள் பங்கேற்கவும் அவர்கள் முடிவெடுத்துள்ளனர். (32)

# சபை முதல்வர் பதவிக்கு மைத்திரிபால சிறிசேன போட்டி

(கொழும்பு)

சிறிலங்காப்பாராளுமன்றத்தின் சபைமுதல்வர் பதவிக்கு போட்டி இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி வேட்பாளராக மைத்திரிபாலசிறிசேனவின் பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதம செயலாளரும் ரஜரட்ட அபிவிருத்தி அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனவின் பெயர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரேரிக்கப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னதாக இப்பதவிக்கு அனுரா பண்டாரநாயக்கவின் பெயா பிரேரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டுறவு அமைச்சு இல்லாமை குறித்து ஊழியர்கள் மத்தியில் அதிர்ச்சி

(கொழும்பு)

கூட்டுறவுத்துறைக்கென இம்முறை அமைச்சு ஏற்படுத்தப்படாமை குறித்து கூட்டுறவு ஊழியர்கள் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர். கூட்டுறவு சங்கம் சர்வதேச மட்டத்தில்1950ஆண்டு தொடங்கப்பட்டு சிறப்புற இயங்கிய வண்ணம் உள்ளது. அதற்கான தனி அமைச்சு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டு கூட்டுறவு சங்கப் பிரச்சினைகள் அந்த அமைச்சினால் தீர்த்துவைக்கப்பட்டது. ஆனால் புதிய அரசு பதவி ஏற்றபின் இம்முறை கூட்டுறவுக்கு அமைச்சர் ஒருவர் நியமணம் செய்யப்படவில்லை. இதனால் கூட்டறவுப் பகுதியில் கடமை புரியும் ஊழியர்கள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். ஜனசவிய, சமுர்த்தி, மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுகள். கூட்டுறவு சங்கம் மூலமாகவே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இவைகளை கவனிப்பதற்கு அமைச்சர் ஒருவர் இல்லாமை பெரும் கவலைக்குரிய சம்பவம் என ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

## வெளியேற்றம்

(கொழும்பு)

முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் டிரோன் பெர்னான்டோ ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து வெளியேறுவதாக அறிவித்துள்ளார்.

ரணில்விக்கிரமசிங்க தேர்தலுக்கு முன்னர் தனக்கு ஒரு நாடாளுமன்றம் இருப்பிடம் தருவதாக கூறியதாகவும், அவ் உறுதிமொழியை செயற்படுத்தவில்லையெனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். அத்துடன் மற்றவர்களுடைய கருத்தினை கேட்கவேண்டாமெனவும், புலிகளுக்கு அதிகளவு விட்டுக்கொடுப்புக்களை செய்யவேண்டாமெனவும், சனாதிபதியுடன் இணைந்து செயற்பட வேண்டுமெனவும் தான் கூறியதை ரணில் கேட்கவில்லையென தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணம்...

செல்லும் இவர் அமெரிக்க ராணுவ வைத்திய நிபுணர்களால் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்து நடத்தப்பட்டு வரும் சத்திரசிகிச்சைகள் மற்றும் அவர்களுடைய நடவடிக்கைகளையும் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பதுடன் யாழ்.மாவட்டத்தில் உள்ள உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களையும் சந்தித்துப்பேச்சுக்களை நடத்துவர். (33)

## கருணா...

தளவாய், ஏறாவூர், மட்டு)

* லெப்டினன்ட்-டனிசன் (செல்லத்துரை-ஜெசிதரன் பிரதான வீதி, மாங்கேணி மட்டு)
* 2ஆம் லெப்டினன்ட்-செல்வவீரன் (சேதுநாதப்பிள்ளை-பிரபா 4ஆம் குறிச்சி, சித்தாண்டி, மட்டு)

ஆகிய மூன்று போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆண்டு ஏப்பிரல் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.